Koviloor Digital Library

ராஜ அலங்காரம்



ACC No: 32192
A.2 111
3-5

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
நண்பர்களின் இலவச வெளியீடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-5

ராஜ அலங்காரம்

பழநி பாதயாத்திரை

எட்டாம் ஆண்டு மலர்

KOVILOOR ANDAVAR
A. No. 32195
KOVILOOR

2002

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

நண்பர்கள் இலவச வெளியீடு

Koviloor Digital Library

பள்ளத்தூர் முருகதாசன் டி.பாலசுப்பிரமணியன் குழுவினரின்

பழனி பாதயாத்திரை பயண விபரம்

தேதி	கிழமை	காலை	மதியம்	இரவு
04-01-2002	வெள்ளி	பள்ளத்தூர்	பள்ளத்தூர்	வைரவன்பட்டி
05-01-2002	சனி	வைரவன்பட்டி	கண்டவராயன்பட்டி	சிங்கம்புணரி
06-01-2002	ஞாயிறு	சிங்கம்புணரி	சமுத்திரப்பட்டி	ஒத்தக்கடை
07-01-2002	திங்கள்	சாணார்பட்டி	சாணார்பட்டி	திண்டுக்கல்
08-01-2002	செவ்வாய்	ரெட்டியார் சத்திரம்	ரெட்டியார் சத்திரம்	ஒட்டன்சத்திரம்
09-01-2002	புதன்	சத்திரப்பட்டி	ஆயக்குடி	பழனி
10-01-2002	வியாழன்	பழனியில் சுவாமி தரிசனம்		

Koviloor Digital Library

முன்னுரை

அறுபடை வீடுகளில் முக்கியமான பழனியம்பதியில் அருள் மிகு தண்டாயுதபாணியாக கோலோச்சி வரும் முருகப் பெருமானின் அருள் பெற தைப்பூச நன்னாளில் பல்லாயிரம் பக்தர்கள் பாதயாத்திரை செல்கிறார்கள். அச்சமயத்தில் "ராஜ அலங்காரம்" என்ற இந்த இதழ் வெளியிடப்படுவது வழக்கம். 1995ம் ஆண்டு நமது வங்கியின் சென்னை பெருமண்டல பணியாளர்களின் முயற்சியால் துவக்கப்பட்ட இம்மலர், எட்டாவது ஆண்டாக மலர்வது எனக்கு பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

இதைக் கண்ணுறும் அனைத்து பக்தர்களும் முருகன் அருள் பெற்று வளமுடன் பல்லாண்டு வாழ இறையருளை வேண்டுகிறேன்.

மலர் வெளியீட்டுக் குழுவினருக்கு எனது வாழ்த்துக்களையும் உரித்தாக்குகிறேன்.

இங்ஙனம்

முருகனடிமை **வீர.குமரப்பன்**
பொது மேலாளர்
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
சென்னை - 600 002.

சென்னை : 600 002.
நாள் : 10-12-2001

Koviloor Digital Library

2002ம் வருட முக்கிய விரத தினங்கள்

மாதங்கள்	அமா-வாசை	பௌர்-ணமி	கிருத்-திகை	சஷ்டி	சங்கடஹர சதுர்த்தி	சிவராத்திரி	சதுர்த்தி	ஏகாதசி	பிரதோஷம்
ஜனவரி	13	28	23	19	2,31	11	17	9,25	11,26
பிப்ரவரி	11	27	19	18	-	10	16	8,23	9,25
மார்ச்	13	28	19	20	2,31	12	18	9,25	11,26
ஏப்ரல்	12	26	15	18	30	10	16	8,23	10,24
மே	11,12	26	12	18	29	10	16	8,22,23	9,24
ஜூன்	10	24	9	16	28	9	14	6,21	8,22
ஜூலை	9,10	24	6	15	27	8	13	6,20	8,21
ஆகஸ்ட்	8	22	2,30	14	26	7	12	4,5,18,19	6,20
செப்டம்பர்	6	21	26	12	25	5	10	3,17	4,18
அக்டோபர்	5,6	20	23	11	24	4	9	2,3,16,17	4,18
நவம்பர்	4	19	20	10	23	3	8	1,15,30	2,17
டிசம்பர்	3,4	19	17	9	23	2	7	15,30	2,17,31

Koviloor Digital Library

வாழ்த்துரை

அழகிலும், ஞானத்திலும், வீரத்திலும், பெருமை கொண்ட முருகக்கடவுள் அறுபடை வீட்டில் புகழ் மிக்கதான பழனியம்பதியில் தண்டாயுதபாணியாக காட்சி கொடுத்து அருள் பாலிக்கிறார். பலநாடு, பலமொழிகளில் அவர் புகழ் பாடப்படுகிறது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று.

"ராஜ அலங்காரம்" என்ற இந்த நூல் முருகக் கடவுளின் பெருமையைப் பற்றியும், ஆன்மீகம், உலகவியல் பற்றிய செய்திகளையும் தாங்கி எட்டாவது ஆண்டாக வெளியிடப்படுவது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நூலைப் படிக்கும் அனைத்து பக்தர்களுக்கும் முருகக்கடவுள் எல்லா நலன்களையும், வளங்களையும், வழங்கவேண்டுமென அவர்தம் அருள் நாடுகிறேன்.

இந்த அரிய முயற்சிக்கு உறுதுணையாக உள்ள மலர் வெளியீட்டு குழுவினரின் ஆன்மீகப் பணி மேலும் பொலிவு பெற எல்லாம் வல்ல முருகக்கடவுள் அருள் பாலிப்பாராக.

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா!
வினை தீர்க்கும் வேலனுக்கு அரோகரா!!

இவண்,
முருகதாசன் **L.பாலசுப்பிரமணியன்.**
தலைவர்
அகில இந்திய ஓவர்சீஸ் வங்கி ஊழியர் சங்கம்
தேசீய வங்கி ஊழியர் கூட்டமைப்பு

சென்னை : 600 002.
நாள் : 10-12-2001

Koviloor Digital Library

நல் வாழ்த்துக்கள்

நமது தமிழ் கடவுளாகிய
பாலமுருகனின் அருளைப் பெற
ஆண்டிக்கோலம் பூண்டு
பழநிமலைக்கு பாதயாத்திரை
செல்லும் பக்தகோடி பெருமக்களுக்கு
எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

L.பாலசுப்பிரமணியன், தலைவர் (AIOBEU/NCBE)
திருமதி.விஜயா பாலசுப்பிரமணியன்
K.நாகப்பன், செயலாளர் (AIOBEU) / இயக்குனர் (IOB)
திருமதி.லட்சுமி நாகப்பன்
S.சண்முகநாதன், பொருளாளர் (AIOBEU)
திருமதி.அமராவதி சண்முகநாதன்
S.சீனிவாசன், பொதுச் செயலாளர் (AIOBEU)
திருமதி.அம்புஜம் சீனிவாசன்
N.ஸ்ரீதரன், துணைத் தலைவர் (AIOBEU)
திருமதி.விஜயகுமாரி ஸ்ரீதரன்

Koviloor Digital Library

நன்றியுரை

சிவசக்தி ஜோதியில் பிறந்த மிகுந்த பராக்கிரமசாலி முருகக்கடவுள் அருள் வேண்டி, அவனது அடியார்கள் பாதயாத்திரை செல்லும் பொழுது அவர்களின் களைப்பிற்க்கு மருந்து போல முருகன் பற்றிய செய்திகளை எளிய நடையில் எடுத்துக் கொடுக்க விழைவதே **"ராஜ அலங்காரம்"** என்ற நூல் வெளியீட்டின் முயற்சியாகும்.

எட்டாவது ஆண்டு மலராக வெளியிடப்படும் இந்த இதழ் வெளிவர ஊக்கம் கொடுத்து வரும் பள்ளத்தூர் பாதயாத்திரை குழு குருசாமி **திருமிகு.L.பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கும், வங்கியின் பொது மேலாளர் முருகனடிமை **திரு.வீர.குமரப்பன்** அவர்களுக்கும் நூல் வெளியீட்டிற்கு அடிப்படை செய்திகள் அளித்த வெளியீட்டு நிறுவனங்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், நண்பர்களுக்கும் அவற்றை சேகரித்து கொடுத்த பல்வேறு கிளைச் செயலர்களுக்கும் மலர் வெளியீட்டுக் குழுவின் சார்பில் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறோம்.

நமது தொழிற்சங்க அலுவலகத் **தோழர்.L.நாச்சியப்பன்** அவர்களுக்கும் மற்றும் சுமதி அச்சகத்தாருக்கும் மலர் வெளியீட்டுக் குழுவின் இதயங்கனிந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

இந்த நூலை படிக்கும் அனைத்து பக்தர்களுக்கும் ஒளிமயமான வாழ்வு அமைய இறையருளை வேண்டுகிறோம்.

இங்ஙனம்

மலர் வெளியீட்டுக் குழுவினர்

V.முத்துசாமி	J.ரவிசங்கர்
C.T.ராமு	V.சிவராமன்
S.பாலசுப்பிரமணியன்	D.வாசு

Koviloor Digital Library

வாழ்த்துகிறோம்

இறையருட் செல்வர் தோழர் **T.பாலசுப்பிரமணியன்** அவர்கள் மூன்றரை லட்சம் வங்கி ஊழியர்களை உறுப்பினராகக் கொண்ட தேசீய வங்கி ஊழியர்கள் கூட்டமைப்பு (NCBE) என்ற அகில இந்திய தொழிற் சங்கத்திற்கு உத்திர பிரதேச மாநிலம். விருந்தாவன் நகரில் நடைபெற்ற மாநாட்டில் மூன்றாம் முறையாக ஏகமனதாக தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு எங்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறோம்.

வங்கி ஊழியர்களின் வாழ்வு சிறக்க தம்மை தியாகம் செய்யும் தலைவரும். அவர்தம் குடும்பத்தாரும் நீண்ட ஆயுளும் நல்ல ஆரோக்கியமும் பெற்று எல்லா வளமும்பெற அருட்கடவுள் முருகனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

அதே மாநாட்டில் அகில இந்திய நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நமது இதர தொழிற்சங்க நிர்வாகிகளுக்கும் எங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர் வெளியீட்டுக் குழுவினர்
ராஜ அலங்காரம்

Koviloor Digital Library

தென்பழநி திசைநோக்கி
திருமுருகன் அருள்பெறவே
என்னாளும் நற்பணிகள்
இனிமையுடன் செய்துவரும்
மன்னவராம் பாலசுப்பிரமணியன்
மகத்தான தலைமையிலே
நன்மக்கள் பல்லோரும்
நடைப்பயணம் செல்கின்றார்!
என்றென்றும் இப்பயணம்
இறையருளால் வெற்றிபெற
நன்றியுடன் வாழ்த்துகிறோம்!
நல்இதயம் கொண்டநாங்கள்!

பக்தியுடன்
வாழ்த்தி வணங்கும் அன்பு உள்ளங்கள்

M.பாலசுப்பிரமணியன், AGS

T.சிட்டி பாபு, NEM
P.செல்வராஜ், NEM
K.துவாரகைவாசன், RCM
D.வாசு,RCM
V.சக்திவேல்,RCM
S.பத்மநாபன், NEM
ஸ்ரீகணேஷ், RCM
M.S.வெங்கடசுப்பிரமணியன், RCM
D.ராஜ், RCM
K.குமார், RCM

மற்றும்
சென்னை பெருமண்டலத் தோழர்கள் தோழியர்கள்

Koviloor Digital Library

விநாயகர் துதி

கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஷ்வர பாத பங்கஜம்

பொருள்:-

யானை முகத்தை உடையவரும் -
பூத கணங்களினால்
போற்றப்படுபவரும் - பழுத்த
நாகப் பழங்களின் சாற்றை
புசிப்பவரும் -
உமையின் குமாரனும் -
துயரங்கள் அழிவதற்குக்
காரணமாக இருப்பவருமான -
பிள்ளையாரின்
பாதங்களை பணிவோம் -
அவர் நமக்கு
அருள் புரிவார்.

விநாயகர் அகவல்

அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல்வேண்டின்
நலமெல்லாம் பெருக வேண்டின்
கற்பகமூர்த்தி தெய்வகளஞ்சியம்
திருக்கைசென்று பொற்பதம் பணிந்து
பாரீர் பொய்யில்லை கண்ட உண்மை.

KOVILOOR ... LIBRARY. KOVILOOR
A. No. 32192

Koviloor Digital Library

விநாயகனே

விநாயகனே வெல்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாய் தன்மையினால்
கண்ணற்பணி மின் கனிந்து.

பல்லவி

விநாயகனே வினை தீர்ப்பபவனே
வேழ முகத்தோனே ஞான முதல்வனே (விநாயகனே)

அநுபல்லவி

குணாநிதியே குருவே சரணம்
குறைகள் களைய இதுவே தருணம் (விநாயகனே)

சரணம்

உமாபதியே உலகம் என்றாய்
ஒரு சுற்றினிலே வலமும் வந்தாய்
கணநாதனே மாங்கனியை உண்டாய்
கதிர் வேலவனின் கருத்தில் நின்றாய் (விநாயகனே)

கணபதியே

கணபதியே வருவாய் அருள்வாய்

பல்லவி

மனம் மொழி மெய்யாலே தினம் உன்னை துதிக்க
மங்கள இசை எந்தன் நாவினில் உதிக்க

அநுபல்லவி

ஏழு சுரங்களில் இன்னிசை பாட
எங்கனும் இன்பம் பொங்கியே ஓட
தாளமும் பாவமும் ததும்பிக் கூத்தாட
தரணியில் யாவரும் புகழ்ந்து கொண்டாட (விநாயகனே)

சரணம்

தூக்கிய துதிக்கை வாழ்த்துக்கள் அளிக்க
தொனியும் மணியென கணீரென்றொலிக்க
ஊக்குக நல்லிசை உள்ளம் களிக்க
உண்மை ஞானம் செல்வங் கொழிக்க (கணபதியே)

Koviloor Digital Library

திருவாசகம்-சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதுமென்னெஞ்சில் நீங்கா தான் தாள் வாழ்க
கோகழியாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகமமாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேக னிறைவடின வாழ்க
வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக் கும்பிஞ்ஞுகுன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்குழல்கள் வெல்க
கரங்குவிலா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈச னடி போற்றி எந்தையடி போற்றி
தேச னடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாறப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான்தன் கருணைக்கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற்கெட்டா எழிலார் கழிலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளக்கொளியாய்
எண்ணிறந்தெல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறென்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லரசு ராசி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைந்தே தனெம்பெருமான்

Koviloor Digital Library

மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயாவென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தனியாய் இயமானனாம்விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப்பெருமானே
அஞ்ஞானம் தன்னா அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கமளவிருதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவாயென்னைப் புருவிப்பாய் நின்றெழும்பின்
நாற்றத்தினேரியாய் சேயாய் நணியானே
மாற்றமணங்கழிய நின்றமறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்க ளோரைந்து டையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றார் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சேரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலாவுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே

Koviloor Digital Library
பாசமாம் பற்றறுத்துப் பாலிக்கும் ஆரியனே
நேசவருள் புரிந்தும் நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதாருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராயுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தைபெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தாற்கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புர்ணவுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறேவந் தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென்சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம்மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டுமெய்யாயானார்
மீட்டிங்குவந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட்கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

கஷ்ட நிவாரண துர்கா ஸ்தோத்திரம்

ஜெய ஜெய துர்கே
ஜெய ஜெய துர்கே
ஜெய விஜயீபவ ஜெய துர்கே
அம்புஜலோசனி அசுர ஸம்ஹாரினி
அனுக்ரஹதாயினி ஜெய துர்கே
கட்ககேடக திரிசூல தாரிணி
கஷ்ட நிவாரிணி ஜெய துர்கே
சும்ப நிசும்பாசுர மாதனி தேவி
சத்ரு சம்ஹாரிணி ஜெய துர்கே
த்ரு ஜகத்மாலினி தீன சட்ரஷனி
துஷ்ட ஸம்ஹாரினி ஜெய துர்கே
நிர்மல நிர்குண நிராமய ரூபினி
நவராத்ரி பூஜாப்ரிய துர்கே
மந்த்ரயந்த்ர தந்த்ர ஸ்வரூபினி
மஹிஷா சூர மர்தினி ஜெய துர்கே
பக்த ஜனபாலினி பாசாங்குச தாரினி
வைசூரிய நாஸினி ஜெய துர்கே
ஸ்ரீ சக்ர வாலினி சிம்மவாஹினி
ஜெகன் மோகினி ஜெய துர்கே
ஜனன மரண பய சோக விநாசினி
ஜகத் சம்ரக்ஷினி ஜெய துர்கே
ஹ்ரிம் கார ரூபினி ஹ்ரிம் மத்ய வாஸினி
ஹ்ரிம் பீஜாமதே ஜெய துர்கே
ஸஜ்ஜன மாலினி சங்கட நாஸினி
ஸௌபாக்யதாயினி ஜய துர்கே

Koviloor Digital Library

சமயபுர மாரியம்மன் ஸ்தோத்திர துதி

ஜெய ஜெய மகமாயி
ஜெய ஜெய மகமாயி
ஜெய ஜெய என உனைத் தேடி
துதிப்போம் ஜெய மகமாயி
சமயபுர வாசினி சங்கட நாசினி
ஸஜ்ஜன பாலினி ஜெய மகமாயி
அம்புஜ லோசினி
அதிதேஜோமயி
அசுர சம்ஹாரினி ஜெய மகமாயி
சர சிந்துவதனே ஸாமக கமளே
சத்ரு சம்ஹாரிளி ஜெய மகமாயி
நானா அலங்காரினி நவரத்னபூஷ்ணி
நித்யோத்தவ பரியே
ஜெய மகமாயி
காவேரி தீரவாசினி
கருணா சாகரி
கஷ்ட நிவாரணி ஜெய மகமாயி
பீதாம்பர தாரிணி பிசாசபயநாஸினி
பக்த ஜன ரக்ஷிணி ஜெய மகமாயி

Koviloor Digital Library

ஹனுமான் தோத்திரம்

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
மாருதிராய ஜெய ஹனுமான்

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
வாயு குமாரா ஜெய ஹனுமான்

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
அஞ்சனை புத்திரா ஜெய ஹனுமான்

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
ஸ்ரீ ராமதூதா ஜெய ஹனுமான்

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
மகானுபாவா ஜெய ஹனுமான்

மகாலஷ்மி துதி

யாரக்தாம்புஜ வாசினீ வரிசினீ சண்டாசு தேஜஸ்வினீ
அரக்தாருதிராம்பரா ஹரிசகீ யா ஸ்ரீ மனோஹலாதினீ!
யா ரத்னாகர மந்தனாத் பிரககடிதா விஷ்ணோக்ஷ யா கேஹினீ

சா மாம் பாது மனோ ரமா பகவதீ லஷ்மீஸ்ச பத்மாலயா!
(இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உச்சரித்தால் சௌபாக்யம் உண்டாகும்).

தன் மக்களின் மழலைப் பேச்சைக் கேட்டு இன்புறாதவர்களே, குழலிசை இனியது யாழிசை இனியது என்று புகழ்ந்து கூறுவார்கள்.

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையாத விளங்குமானால், அவ்வாழ்வின் பண்பும் பயனும் அதுவேயாகும்.

Keviloor Digital Library

தினசரி வழிபாடு

குழந்தைகள் கீழ்கண்ட மந்திரங்களைக் கூறி மனத்தை ஒருமுகப்படுத்தும் முறையைக் கற்றுக்கொண்டு இறைவனை வழிபட வேண்டும்.

விநாயகர் வணக்கம்

1. ஓம் ஓங்கார ரூபாய நம
2. ஓம் வீர கணபதியே நம
3. ஓம் ஞான கணபதியே நம
4. ஓம் ஸித்தி பிரதாய நம
5. ஓம் வித்யா ராஜாய நம

முருகன் வணக்கம்

1. ஓம் ஞான பண்டிதாய நம
2. ஓம் சரவண பவாய நம
3. ஓம் சுப்ரமண் யாய நம
4. ஓம் சுவாமி நாதாய நம
5. ஓம் கார்த்தி கேயாய நம

சிவ வணக்கம்

1. ஓம் மகேஸ்வராய நம
2. ஓம் மகா தேவாய நம
3. ஓம் சிவாய நம
4. ஓம் கைலாச வாசனே நம
5. ஓம் சதா சிவாய நம

சக்தி வணக்கம்

1. ஓம் அன்ன பூர்ணாய நம
2. ஓம் அபய ப்ரதாயை நம
3. ஓம் மஹா வித்யாயை நம
4. ஓம் நாத ரூபாயை நம
5. ஓம் சக்தி ரூபாயை நம

Koviloor Digital Library

சரஸ்வதி வணக்கம்

1. ஓம் வேத ஜனன்யை நம
2. ஓம் ஞான முத்ராயை நம
3. ஓம் வரத ஹஸ்தாயை நம
4. ஓம் ப்ராண வாஸ னாயை நம
5. ஓம் துர்கா லக்ஷ்மி சரஸ்வத்யை நம

திருமால் வணக்கம்

1. ஓம் அச்யு தாயை நம
2. ஓம் புருஷோத்தமாய நம
3. ஓம் கோவிந்தாய நம
4. ஓம் ஆதி தேவாய நம
5. ஓம் நாராய ணாய நம

மேலே உள்ள மந்திரத்தை கூறி மனம், பண்பட்ட நிலையில் "இறைவா, நான் நல்லவனாகவும், வல்லவனாக வாழவும், வீட்டில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியுடன் என் கடமையை செய்யவும், நாட்டிற்கு நல்லது செய்து வாழவும் எனக்கு வழிகாட்டுவாயாக. தீயோர் என் வாழ்வில் குறுக்கிடாதவாறு தடுத்து என்னை காப்டாற்ற வேண்டுகிறேன்" என்று வேண்டிக் கொள்ளவும்.

கணேச சரணம்

கணேச சரணம் சரணம் கணேசா
சரணம் சரணம் சரணம் கணேசா
மூலமுதற் பொருளே சரணம் கணேசா
மூத்தவன் நீயே சரணம் கணேசா (கணேச)

பார்வதி பாலா சரணம் கணேசா
மாலவன் மருகா சரணம் கணேசா
சக்தியின் மைந்தா சரணம் கணேசா
சகலமும் அருள்வாய் சரணம் கணேசா (கணேச)

Koviloor Digital Library

யானை முகத்தோனே சரணம் கணேசா
நான் உன்னைப் பணிந்தேன் சரணம் கணேசா
கானில் வாழும் சரணம் கணேசா
பாவம் போக்கும் சரணம் கணேசா (கணேச)

என்பிழை பொறுப்பாய் சரணம் கணேசா
ஈஸ்வரன் மைந்தா சரணம் கணேசா
உன்னருள் இன்றி சரணம் கணேசா
உலகம் மகிழுமோ சரணம் கணேசா (கணேச)

கனிதனைப் பெற்றிட சரணம் கணேசா
கணமதில் ஞாலமாய் சரணம் கணேசா
தந்தையைச் சுற்றியே சரணம் கணேசா
கனிதனைப் பெற்றவா சரணம் கணேசா (கணேச)

கன்னிமூலனே சரணம் கணேசா
இனியெனைக் காத்திட சரணம் கணேசா
தடையென்ன மூலவா சரணம் கணேசா
தயவுடன் வருவாய் சரணம் கணேசா (கணேச)

சண்முக நாமாவளி

ஹரஹர சிவசிவ சண்முக நாதா
ஹரஹர சிவசிவ வெண்முக நாதா
ஹரஹர சிவசிவ பரம விலாசா
ஹரஹர சிவசிவ வடய குகேசா
அருண கிரிபரவு மருணெறி நாதா
தரும வுருவர்புகழ் சததள பாதா
அரிபிர மாதிக டொழுவடி வேலா
திருவடி நாரவ குளமுறை சீலா
எனினிய குருநித மெனுமதி யீசா
சனனவெய் தறவளி தருபர மேசா

Koviloor Digital Library

பாசா பாச பாபா விநாசா
மாசே றுத மான நடேசா
போஜா வாஜா பூஜகர் நேசா
தேஜா ராஜா தேவஸ மாஜா
தீஞ்சுவை யருளொரு திருவா ஏழுதே
ஓஞ்சர வணபவ வுருவே யருவே

ஸ்ரீ மத் பாம்பன் சுவாமிகள்

ஸ்ரீ கிருபானந்த வாரியார் சுவாமிகள் அருளிய அறுபடை வீட்டு வாரப்பதிகம்

ஞாயிற்றுக்கிழமை-திருப்பரங்குன்றம்

தாயினும் இனிமையாகத்
　　தண்ணருள் புரிவாய் போற்றி
சேயெனை ஆள்வாய் ஞானத்
　　திருமுருகேசா போற்றி
மீஉயர் பரங்குன்றத்தில்
　　மேவிய வேலா போற்றி
ஞாயிறு வாரம் வந்து
　　நலமெலாம் அருள்வாய் போற்றி.

திங்கட்கிழமை-திருச்செந்தூர்

துங்கத் தமிழால் உனைத் துதித்துத்
　　தொழுவோர்க்கு அருள்வேலவ போற்றி
சிங்க முகனை வதைத்த அருட்
　　செல்வத் திருநாயக போற்றி
சங்கப்புலவர் தமக்கெல்லாந்
　　தலைவா! சிவ தேசிக போற்றி
திங்கட்கிழமை வந்தருள்வாய்
　　செந்தில்பதி நின்பதம் போற்றி

Koviloor Digital Library

செவ்வாய்கிழமை-பழனி

செவ்வான் அனைய திருமேனிச்
சேயே! நாயேன் துயர்தீராய்
எவ்வானவரும் ஏத்துகின்ற
இறைவா இளம் பூரண போற்றி
தெய்வாதனை இலாத பர
சிவயோகியர் தேசிக போற்றி
செவ்வாய்க்கிழமை வந்தருள்வாய் .
செல்வ பழநிக்குக போற்றி

புதன்கிழமை-திருவேரகம்

மதவாரண மாமுகத்தோன் பின்
வந்தகந்தா! சிவயோகப்
பதவாழ்வு அருள்வாய் பன்னிருக்கைப்
பரனே! அரனார் பாலகனே!
உதவாக் கரையாம் அடியேற்கும்
உண்மைப் பொருளை உரைத்திடவே
புதவார மதில் வந்தருள்வாய்
பொருவில் திருவேரக போற்றி

வியாழக்கிழமை-குன்றுதோறாடல்

மயான முறையும் இறையான்
மகேசன் பெற்ற குகேசனெனத்
தியானப் பொருளாம் திருமுருகா!
தேவே மாவேதிய போற்றி
தயாளசீலா! தணிகை முதல்
தவர்வாழ் குன்றுதோறும் வாழ்வாய்
வியாழக்கிழமை வந்து அருள்வாய்
வேலா கோலாகல போற்றி

Koviloor Digital Library

வெள்ளிக்கிழமை-பழமுதிர்ச்சோலை

அள்ளி வழங்கும் ஆறுமுகத்து
அரசே! விரைசேர் கடம்பணிந்த
வள்ளிக் கணவா! வடிவேலா
வரச் சரதப் பெருவாழ்வே
வெள்ளிமலை நேர் வியன்ஞான
மேவு பழமார் சோலையனே
வெள்ளிக்கிழமை வந்தருள்வாய்
வேதநாத பதம்போற்றி

சனிக்கிழமை-வயலூர்

கனிவாய் வள்ளி தெய்வானை
கணவா உணர்வார் கதிர்வேலா
முனிவாயெனல் யான் எங்க்டைவேன்
முத்தா அருணை முனிக்கரசே
இனிவாதனையால் அடிநாயேன்
என்றும் குன்றாவணம் வாழ
சனிவாரமதில் வந்தருள்வாய்
தயவார் வயலூர்ப்பதி போற்றி

நீலமயில்மீது

நீல மயில் மீது ஞாலம் வலம் வந்த
நீதான் எனக்கருள வேண்டும் முருகா (நீலமயில்)
அநுபல்லவி
சீலதிருமாலின் சிந்தை மகிழ் மருகா
சேவற்கொடி அழகாய்த் தாங்கி நிற்கும் ஷண்முகா (நீலமயில்)
வேலினைக்கையிலேந்தும் வேலவனே எழில்
வேழமுகம் உடைத்தோன் சோதரனே
வேல்விழி குறமாதின் மணாளனே என்
சிந்தைக் குகந்தவனே கந்தனே குகனே (நீலமயில்)

Koviloor Digital Library

பன்னிரு விழிகளிலே

பன்னிரு விழிகளிலே பரிவுடன் ஒரு விழியால்
என்னை நீ பார்த்தாலும் போதும் வாழ்வில்
இடரேதும் வாராது எப்போதும்-சண்முகா (பன்னிரு)

அநுபல்லவி

உன்னிரு பதம் நினைந்து அன்புடன் தினம் பணிந்து
திண்ணமாய் போற்றும்என் பால் நிறைதிருவுள்ளம் கனிந்து (பன்னிரு)

சரணம்

பன்னக சயனன மகிழ்ந்திடும் மருகா
பாரோர் புகழ்ந்து போற்றிடும் குமாரா
வண்ண மயிலேறும் வடிவேல் அழகா
வள்ளி தெய்வானையுடன் காட்சி தரும் ஆறுமுகா (பன்னிரு)

நீயல்லால் தெய்வம் இல்லை

நீயல்லால் தெய்வம் இல்லை-எனது
நெஞ்சே நீ வாழும் எல்லை முருகா (நீயீல்லால்)

அநுபல்லவி

தாயாகி அன்பு பாலூட்டி வளர்த்தாய்
தந்தையாய் நின்றே சிந்தை கவர்ந்தாய்
குருவாகி எனக்கு நல்லிசை தந்தாய் ஞான
குருவாகி எனக்கு நல்லிசை தந்தாய் திருவே நீ என்றும்
என் உள்ளம் நிறைந்தாய் நாயேனை நாளும் நல்லவனாக்க
ஓயாமல் ஓழியாமல் உன்னருள் தந்தாய் (நீயல்லால்)
வாயாரப்பாடி மனமார நினைத்து வணங்கிடவே எந்தன்
வாழ் நாளில் இன்பம் தூயா முருகா மாயோன் மருகா
தொழுவதொன்றே இங்கு நான் பெற்ற இன்பம் உன்னை
தொழுவதொன்றே இங்கு நான் பெற்ற இன்பம் (நீயல்லால்)

Keviloor Digital Library

மயிலாக நான் மாறவேண்டும்

மயிலாக நான் மாற வேண்டும் வள்ளி
மணவாளன் என் தோளில் இளைப்பாறவேண்டும் (மயிலாக)

அநுபல்லவி

குயிலாக நான் மாறவேண்டும் முத்துக்
குமரேசன் துதிபாடி பசியாற வேண்டும்

சரணம்

மலையாக நான் மாறவேண்டும் எந்தன்
முடி மீது வடிவேலன் குடியேற வேண்டும் (மயிலாக)
படியாக நான் மாறவேண்டும்-மெய்
அடியார்கள் திருப்பாதம் முத்தாட வேண்டும்

பார்புகழும் பழனியிலே

பார்புகழும் பழனியிலே பங்குனி தேர் ஓட்டம்
அதை பார்த்து மகிழத்தானே
இங்கு கடல் போல் கூட்டம் (பார்)

தங்கத்தேரில் முருகன் வரும்
அழகே அழகாம்
அதை தனித்தமிழில் பாட பாட
சேரும் புகழும் (பார்)

ஓங்கார வேலன் அவன் ஒளிமுக சிரிப்பு அது
உலகத்தையே கவர்ந்திழுக்கும்
அழகின் விரிப்பு
பக்தர்களின் தோள்களில் எல்லாம் (பார்)

பால் காவடி ஆடிபாடும் அவர் மனதில் எல்லாம்
முருகன் சேவடி
காணாத காட்சி எல்லாம் பழனி மலையிலே
அதை காட்டமுடியுமா எனது இசையின் அலையிலே (பார்)

Koviloor Digital Library

எங்கெல்லாம் தேடுவதோ முருகா

எங்கெல்லாம் தேடுவதோ முருகா
எழில்மேவும் குமரா உன் அருள் வேண்டி தினமும் நான் (எங்)

அநுபல்லவி

அங்கு இங்கு என்று அலைந்து திரிந்த பின்னும்
அழகா உன்னை காணும் ஆவலினால் இன்னும் (எங்)

சரணம்

ஆறுபடை வீடென்னும் பேருடைய பழனியுடன்
அழகியசோலை மலை அடுத்தே சுவாமிமலை
சீருடன் கவிபாடும் செந்தில் பரங்குன்றம்
கூறிடும் குன்று தோறாடலென்றறியு முன்னே (எங்)

வேலுண்டு வினையில்லை

வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை மனமே
கந்தனுண்டு கவலையில்லை மனமே (வேலுண்டு)

உலகமெனும் கடல்தனிலே உடலென்னும் ஓடமது
உன்னடிக்கரை அடைய அருள்வாய்-முருகா
உன்னடிக்கரை அடைய அருள்வாய் (வேலுண்டு)

ஊனுடம்பை வளர்ப்பதற்கு ஒவ்வொருநாளும் கழித்தேன்
உன்னருள் வளர வழி உணர்கிலேன்-முருகா
உன்னருள் வளர வழி உணர்கிலேன் (வேலுண்டு)

ஓயாது ஒழியாது உன்நாமம் சொல்பவர்க்கு
உயர்கதிதான் தந்திடுவாய்-முருகா
உயர்கதிதான் தந்திடுவாய்-முருகா (வேலுண்டு)

Koviloor Digital Library
கருணையே வடிவமான கந்தசாமித் தெய்வமே
உன் கழலடியைக் காட்டி எனை ஆளுவாய் - முருகா
உன் கழலடியைக்காட்டி எனை ஆளுவாய் (வேலுண்டு)

நெஞ்சமதில் வஞ்சமின்றி நிர்மலனே நின்னடியைத்
தஞ்சமென நெஞ்மதில் எண்ணினேன்-முருகா
தஞ்சமென நெஞ்சமதில் எண்ணினேன் (வேலுண்டு)

வேல் எடுத்து வந்தபோது

வேல் எடுத்து வந்தபோது வெற்றி மாலை வந்தது
கால் எடுத்து வந்தபோது தமிழ்ப் பாடல் வந்தது
உலகை வலம் வந்தபோது உண்மை ஒளிபிறந்தது
உள்ளக்கதவை திறந்தபோது ஞானப்பழம் கனிந்தது (வேல்)

கந்தன் திரு மேனியை கண்டபோது வண்ணமயில் வந்தது
ஆறுபடை வீடுதோறும் சேவற்கொடி பறந்தது
ஆறுமுகமான பொருள் அறிவு கண்ணில் தெரிந்தது
ஆசை மனம் அறிந்தபோது வள்ளி மணம் புரிந்தது (வேல்)

கற்பனையில் உருவெடுத்து திருப்புகழ் உயர்ந்தது
அடியார் வினை தீர்த்தபோது அன்பு உறவு வளர்ந்தது
தேவர்குல தலைவன் என்றே உள்ளமது மகிழ்ந்தது
விழிகளிலே கருணை என்னும் அருளும் மலர்ந்தது (வேல்)

திருப்புகழ்

முத்தைத்தருபத்தித்திருநகை அத்திக் கிறை சக்திக் சரவண
அத்திக்கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின் முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து மூவர்க்கத் தமரரும் அடி பேணப்
பத்துத்தலைத்தக்கணைதொடு வொற்றைக்கிரிமற்றைபொழுதெர
பட்டப்பகல் வட்டத்திகிரியில் இரவாகப்

Koviloor Digital Library

பத்தற்கிரதந்தைக்கடலியப்பச்சைப்பயன் மெச்சித்தருபொருள்
பட்சத்தொடு ரட்சித்தருளுவ தொரு நாளே
தித்தித்தெய ஒத்தய்பரிபுர நிர்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்க் கழுகொடு கழுகாடத் திக்குப்பரி
வட்டப்பயிரவர் தொக்குத் தொகு தொகுத் தொகு தொகு
சித்திரப் பவுரிக்குக் கரிகடக எனவோதக் கொத்துப்பறை
கொட்டக் களமிசை குக்குக்குகு குக்குக் குகு குகு
குத்தி புதை ட ்குப் பிடியென முது கூகை
கொட்பற்றெழ நட்பற்றவுணறை வெட்டிப்பலியிட்டு குலகிரி
குத்தப்படஒத்துப் பாரவல பெருமாளே

குறை ஒன்றும் இல்லை

குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா

கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எமக்கு
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா
வேண்டியதை தந்திட வேங்கடேசன் நின்றிருக்க
வேண்டியது வேறில்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா
திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா
உன்னை மறையோதும் ஞானியர் மட்டுமே காண்பார்
என்றாலும் குறை ஒன்றும் எனக்கில்லை கண்ணா
குன்றின் மேல் கல்லாகி நிற்கின்ற வரதா
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா
கலி நாளில் இணங்கி கல்லிலே இரங்கி
நிலையாக கோயினில் நிற்கின்றாய் கேசவா
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா

Koviloor Digital Library
யாரும் மறுக்காத மலையப்பா உன் மார்பில்
என்றும் தவம் இருக்கும் கருணை கடல் அன்னை
என்றும் இருந்திட ஏது குறை எமக்கு
ஒன்றும் குறை இல்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா. கோவிந்தா.

கீதை சொன்ன கண்ணன்........

கீதை சொன்ன கண்ணன் வண்ணத்தேரில் வருகிறான்
கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்
வள்ளல் வருகிறான் அன்பு வள்ளல் வருகிறான்
வருகிறான் வருகிறான் வருகிறான்
நீலமேனிகோலம் காண கண்கள்மறுக்குமோ....அவன்
நிமிர்ந்த தோளும் விரிந்த மார்பும்
நெஞ்சம் மறக்குமோ
நீலமேனி கோலம் காண கண்கள் மறுக்குமோ
நிமிர்ந்த தோளும் விரிந்த மார்பும்
நெஞ்சம் மறக்குமோ
வீரன் வடிவும் மீசை அழகும் வெற்றி ரகசியம்
வீரன் வடிவும் மீசை அழகும் வெற்றி ரகசியம்
பாரதப் போர் நடத்தி வைத்த யுக்தி அதிசயம்
அது முக்தி ரகசியம் (கீதை)
அல்லி கேணி குளத்தினருகில் கள்ளன் சிரிக்கிறான்
திருவல்லிக்கேணி குளத்தினருகில் கள்ளன் சிரிக்கிறான்
அன்பு கொண்டு வருபவர்க்கு ஒன்று உரைக்கிறான்
அனபு கொண்டு வருபவர்க்கு ஒன்று உரைக்கிறான்
சொல்லும் மந்திரம் எட்டெழுத்தில் சொர்க்கம் தோன்றுதே
சொல்லும் மந்திரம் எட்டெழுத்தில் சொர்க்கம் தோன்றுதே
சொல்ல சொல்ல ஐயன் தோற்றம்
வானில் நீண்டதே
பார்த்தனுக்கு பாடம் சொன்ன
கீர்த்தன் வருகிறான்
பசித்தவர்க்கு விருந்தளிக்க

Koviloor Digital Library

அமுது கொணர்கிறான்
பார்த்தனுக்கு பாடம் சொன்ன
கீர்த்தன் வருகிறான்
பசித்தவர்க்கு விருந்தளிக்க
அமுது கொணர்கிறான்
காப்பதற்கு கையில் ஏந்தும்
சங்கு சக்கரம்
காப்பதற்கு கையில் ஏந்தும்
சங்கு சக்கரம்-அவன்
கழல்களுக்கு விளக்கம் தானே
பிரம்ம சூத்திரம்
நான்கு வேத சாஸ்திரம் (கீதை)

மணிகண்டா வா வா!

மணிகண்டனே மணிகண்டனே வாவா - நாங்கள்
மகரஜோதி கண்டிடவே வாவா-உன்
பக்தரெல்லாம் பூஜை செய்தோம் வாவா-அந்த
பரமசிவன் பாலகனே வாவா (மணி)

அச்சங்கோயில் அரசனே நீ வாவா
அச்சமெல்லாம் போக்கிடவே வாவா
ஆரியங்காவய்யாவே வாவா
ஆனந்த ரூபனே நீ வாவா (மணி)

குளத்துப்புழை பாலகனே வாவா
குழந்தை மணிகண்டனே நீ வாவா
எரிமேலி சாஸ்தாவே வாவா
எங்கள் குலதெய்வமே நீ வாவா (மணி)

பம்பபை நதி பாலகனே வாவா
பரந்தாமன் மைந்தனே நீ வாவா
சபரிமலை நாயகனே வாவா
சஞ்சலங்கள் தீர்த்திடவே வாவா (மணி)

Koviloor Digital Library

காந்தமலை ஜோதியே நீ வாவா
கண்கண்ட தெய்வமே நீ வாவா
கருணைக்கடலே நீ வாவா-உன்
கன்னிகளைக் காத்திடவே வாவா (மணி)

மோகினியின் பாலகனே நீ வாவா
மோகன சுந்தரனே வாவா
அகிலலோக நாயகனே வாவா
ஆதரித்து அருள் புரிய வாவா (மணி)

நெய்யினில் ஜொலிப்பாய்!
தாய்போல் காப்பாய்!

கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா

எரிமேலி வாசா!
எங்களின் நேசா!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

கரிமலை வாசா!
கண்கண்ட நாதா!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

நெய்யினில் குளிப்பாய்!
நித்தமும் மகிழ்வாய்!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

Koviloor Digital Library

தையினில் ஜொலிப்பாய்!
தாய்போல் காப்பாய்!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

பக்தரைக் காப்பாய்!
பாவத்தைக் களைவாய்!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

சிக்கலைத் தீர்ப்பாய்!
சிறப்புற அருள்வாய்!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

மலையினில் இருப்பாய்!
மனதினில் நிறைந்தாய்!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

சிலையென அமர்ந்தாய்!
செயல்பட வைப்பாய்!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

கார்த்திகை முழுதும்!
கருணையைப் பொழிவாய்!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

பார்த்தனின் மகனாய்ப்!
பாரதம் காப்பாய்!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

Koviloor Digital Library

பந்தளச் செல்வா!
பம்பையின் மைந்தா!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

வந்தே தொழுதோம்!
வரங்கள் பெற்றோம்!
சரணம் சரணம் ஐயப்பா!
சாமி சரணம் ஐயப்பா!

உதித்ததங்கே ஒளிவிளக்கு

உதித்ததங்கே ஒளிவிளக்காக உத்திர நட்ஷத்திரம்
தெரித்த ஒளியில் திருவிளக்காக தெய்வம் உன் அம்சம்
குவித்த கரங்கள் கேட்கின்ற வரங்கள் கொடுக்கும் அருளம்சம்

(உதித்ததங்கே)

கலியுகவரதன் காலடி சேர்ந்தால் காணும் பேரின்பம்
தெளிவுரும் மனது தேனிடும் பொழுது தேய்ந்திடும் துன்பம்
மலரடி தொழுதேன் மனம்விட்டு அழுதேன் மணிகண்டன் சந்நிதியில்

(உதித்தங்கே)

இருமுடி எடுத்து திருவடி தேடி வருவேனே அய்யா
கரிமலை மேலே வரும்வழி பார்த்து காத்திடும் என்னய்யா
தேகம்பலம்தா பாத பலம்தா தேடிவரும் நேரம்
பாதபலம்தா தேகபலம்தா தேடிவரும் நேரம்

(உதித்தங்கே)

Koviloor Digital Library

தையல் நாயகி பாமாலை

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

எள்ளுப்பூ மூக்கு எழிற்குவளைப் பூக்கண்கள்!
இயல்பான அழகு வடிவம்
இனிய முகம் தாமரை! இருசெவிகள் செந்தாழை
இறைவி நிறம் நல்ல பவளம்
கள்ளிருக்கும் ரோஜாப்பூக் கன்னங்கள் அல்லியில்
கடைந்ததோர் இரண்டு கால்கள்
கைகளும் விரல்களும் கனகாம்பரம் மல்லி
கற்பகப் பூவில் தோள்கள்
புள்ளிருக்கும் வேளூர் பூவையுன் அங்கமெல்லாம்
பூக்களாய் மலர்ந்திருக்க
பூவுடல் கொண்டவுனை வர்ணித்து பாமாலை
பூ மாலையோடு தந்தேன்
வள்ளவள் உன்அருளாலே வரும்துயரைப் போக்கி
வரம் தந்து காக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ் வரன்கோவில் வளர் தையல் நாயகியே
வளம்காண வைக்கும் உமையே.

(ஓம் சக்தி)

பால்கேட்டு அழுததோர் பிள்ளைக்குச் சீர்காழிப்
படித்துறையில் பால் கொடுத்தாய்
பச்சைவெற் றிலைதுப்பிக் கவிகாள மேகத்தைப்
பாட்டரசன் ஆக்கி வைத்தாய்
வேல்கேட்ட பிள்ளைக்குச் செந்தூரில் சமர்செய்ய
விருப்பமுடன் வேல் கொடுத்தாய்
விளையாடும் ஏழரைச் சனியோடு கிரகங்கள்
விலகிடும் வழி அமைத்தாய்
நூல் கேட்ட ஞானத்தில் நூறுகவி பாடுமெனை
நோக்கி நீ எது கொடுத்தாய்?

Koviloor Digital Library

நொடிப்பொழுதில் என்வாழ்வில் படிப்படியாய் துயரங்கள்
நுழைவதற்கு ஏன் விடுத்தாய்?
வாழ்வரசி இனி எனது வருங்காலம் செல்வங்கள்
வளம் காலம் ஆக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமைய.

(ஓம் சக்தி)

தா என்று கேட்டவுடன் கொடுப்பதனால் தானுன்னைத்
தாய் என்று சொல்லிவைத்தார்!
தலைமகனுன் சந்நிதியில் கலைமகளின் அருளாளே
தமிழ் பாடி வரங்கள் பெற்றார்!
சேய் ஒன்று எதிரினிலே கதறுவது கேட்காமல்
செவிமூடி நிற்கலாமோ?
சிறுபிழைகள் இருந்தாலும் மன்னித்து அருள்காட்டும்
தேவியவள் நீயல் லவோ?
ஆயகலை அத்தனையும் அறிந்தவனை நோய்நொடிகள்
அணு கவிடல் முறையாகுமோ
வாயுவென வேகமாய் வந்தெனது துயர் தீர்த்து
மகிழ்ச்சியினைக் கொடுக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ் வரன்கோயில் வளர்தையல் நாயகியே!
வளம்காண வைக்கும் உமையே!

(ஓம் சக்தி)

தங்க நிகர் குணத்தோடு தைரியமும் தருகின்ற
தமிழ்ச் செல்வி போற்றி போற்றி
தரணியில் புகழ்காண வரமளிக்கும் சுந்தரியாம்
தாமரைப்பூமாது போற்றி
மங்கையருக்கு மாலைகளும் மன்னவர்க்கு வேலைகளும்
மகிழ்ந்தளிக்கும் அரசி போற்றி!
மாதரசி உண்ணா மலை அழகு சிவகாமி
மங்கை மீனாக்ஷி போற்றி!
பொங்கிவரும் துயரத்தை பொடியாக்க ஓடி வரும்
அன்னபூரணி கல்யாணி போற்றி

Koviloor Digital Library

யோகமுடன் வாழ்வு தரும் பூங்கொடியாம் விசாலாட்சி
புனித உமாதேவி போற்றி
மங்களங்கள் அத்தனையும் எங்களது வீடுவர
மாதரசி கூட்டிவருவாய் - அம்மா
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே.

(ஓம் சக்தி)

மலைபோன்று செல்வத்தை குவித்து வைத்திருந்து நான்
மற்றவருக்கு உதவ வேண்டும்.
மழலையின் குணத்தோடு முதுமையிலும் இளமையாய்
மகிழ்வோடு வாழவேண்டும்.
கலைதவழும் மேடையெல்லாம் பூமாலை அணிந்து நான்
கௌரவம் செய்ய வேண்டும்.
நிலையான புகழ் தந்து உற்றாரும் மற்றாரும்
நேசிக்கும் உறவு வேண்டும்
நீ எனது துணையாகி நான் செல்லும் பாதைக்கு
நேர் வழிகள் காட்டவேண்டும்
வளையாடும் கரத்தழகி பகை வென்று எந்நாளும்
மறுக்காமல் காக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே

(ஓம் சக்தி)

சிறுவயதில் உன்பெருமை தெரிந்திருந்தாலுன்னைச்
சேவித்து மகிழ்ந்தி ருப்பேன்!
தெரியாமல் செய்தபிழை அத்தனையும் மன்னிக்கத்
தேடிவந்து அழுதி ருப்பேன்!
புரியாமல் எடுத்தயிப்பிறவிதனில் மங்கையரின்
போகத்தை அளந்திருந்தேன்
பொன்னோடும் பெண்ணோடும் வருமின்பம் போதுமெனப்
புரியாமல் வாழ்ந் திருந்தேன்.
திருநாளில் உன்பெருமை தெரிந்ததும் தொடர்ந்துநான்
செவ்வாயில் விரதம் வைத்தேன்!
தித்திக்கும் அருள் தன்னை சித்திக்க வரம் வேண்டி
சிங்காரப் பாட்டி சைத்தேன்!

Koviloor Digital Library

பருவத்தில் நான் செய்த பாவத்தை மன்னித்துப்
பாவை நீ காக்க வருவாய் - அம்மா
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே!
வளம்காண வைக்கும் உமையே!

(ஓம் சக்தி)

திருக்கழுக் குன்றத்தில் கழுகுக்கும் மதியத்தில்
தினந்தோறும் சோறு உண்டு!
திருநாளாம் பொங்கலில் நந்தியெனும் மாட்டுக்கும்
தித்திக்கும் பொங்கல் உண்டு!
வருஷத்தில் ஒரு நாளில் வடையோடு அன்னத்தை
வைரவரும் காண்ப துண்டு!
வளர்கின்ற புற்றுக்குள் ஒளிகின்ற பாம்புக்கும்
வார்க்கின்ற பாலு முண்டு!
அர்ச்சித்து வழிபடும் அன்னையே உனையென்னும்
அடியேனுக் கென்ன உண்டு?
அன்றுதினம் அளந்தபடி என்றைக்கும் நடந்திடவே
அருள்புரிய வேண்டும் அம்மா!
மரம் வைத்த நீதானே தண்ணீரும் விடவேண்டும்
மறந்திடல் முறை யாகுமா - அம்மா
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே!
வளம்காண வைக்கும் உமையே!

(ஓம் சக்தி)

கழுதையெனும் பிறவியை எடுத்தாலோ நிச்சயம்
கழுத்திலே பொதி யிருக்கும்!
காளைமாடகவே பிறந்திடின் நிச்சயம்
கழனியில் கால் இருக்கும்!
பழுதான பிறவியாம், நாயாகப் பிறந்தாலோ
பகலிரவு விழிக்க வேண்டும்!
பறவையாய்ப் பிறந்தாலும் மரங்களின் உச்சியில்
பதியங்கள் போட வேண்டும்
அழுதாலும் தொழுதாலும் அன்னையே உனையன்றி
யாரெனக் குதவு வார்கள்?
ஆறறிவு கொண்டதோர் மனிதனாய் என்னை நீ
அகிலத்தில் படைத்த பின்னால்

Koviloor Digital Library

வழிகாட்ட மறுப்பதும் நியாயமா? என்விழியில்
வடிந்து நீர் ஓடலாமா - அம்மா
வைத்தீஸ் வரன்கோவில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே.

(ஓம் சக்தி)

புல்லாகிப் பூடாகி புழுவாகி இருந்தாலோ
புலம்பியே தீர வேண்டும்!
பொன்னாக அணிகின்ற மனிதனாய்ப் பிறந்த நான்
புதுயுகம் காண வேண்டும்
கல்லாகி நிற்கின்ற தெய்வம் நீ இல்லையெனக்
காட்டிட விரைந்து வருக!
கனதனம் நீதந்து காசினியில் புகழ்தந்து
காவலாய் நின்று அருள்க!
முள்ளாக மலராக மோதிடும் வாழ்க்கையில்
முற்றும் நான் நம்பி வந்தேன்
மோதகப் பிரியனின் தாயான உன்னிடம்
முறையீடு செய்யுகின்றேன்!
பல்லக்கு பரிவாரம் பார்த்திடும் ராஜாங்க
பவனியை எனக்கு அருள்க - அம்மா
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே!
வளம்காண வைக்கும் உமையே!

(ஓம் சக்தி)

எவருக்கு எதுவேண்டும் என்பதை அறிந்த நீ
ஏறிட்டு பார்க்க வில்லை!
இருகரம் கூப்பியுன் சந்நிதியில் நிற்கும் நான்
எதுகேட்டும் மாற வில்லை!
சிவல்புரியில் வாழ்கின்ற சிங்காரம் தந்ததோர்
செந்தமிழ் கவிதை மூலம்
சீர்கொண்ட பதிகங்கள் பத்தையும் கேட்டு நீ
சிரமத்தை அகற்ற வேண்டும்.
கவலைக்கு மருந்தாகும் கடவுளே உனை நம்பி
காலங்கள் போக்கிவிட்டேன்!

Koviloor Digital Library

வழிகாட்டி

பக்தர்களின் வழி நடைப் பாதையில் ஏற்படும் களைப்பை நீங்கக உதவும் வகையில் ஊர்களிடையயே உள்ள தூரங்களை இங்கே கொடுத்துள்ளோம்.

ஊர்களின் பெயர்கள்

காரைக்குடி - குன்றக்குடி	9
குன்றக்குடி - பிள்ளையார்பட்டி	4
பிள்ளையார்பட்டி - வைரவன்பட்டி	1
வைரவன்பட்டி - கண்டவராயன்பட்டி	8
கண்டவராயன்பட்டி - திருக்களாப்பட்டி	5
திருக்களாப்பட்டி - மு.கோவில்பட்டி	2
மு.கோவில்பட்டி - மருதுப்பட்டி தோப்பு	1
மருதுப்பட்டி தோப்பு - சதுர்வேதமங்கலம்	3
சதுர்வேதமங்கலம் - காளாப்பூர்	3
காளாப்பூர் - சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் கோவில்	4
சிங்கம்புணரி ஷ கோவில் - சொக்கலிங்கபுரம்	3
சொக்கலிங்கபுரம் - பாண்டாங்குடி	2
பாண்டாங்குடி - மதுரை ரோடு சந்திப்பு	2
மதுரை ரோடு சந்திப்பு - நத்தம் ரோடு சந்திப்பு	1
நத்தம் ரோடு சந்திப்பு - மணப்பச்சேரி	3
மணப்பச்சேரி - வெள்ளாளபட்டி	2
வெள்ளாளபட்டி - கண்டக்காய்பட்டி	1
கண்டக்காய்பட்டி - சமுத்திரபட்டி	3
சமுத்திராபட்டி - ஏரக்காய்பட்டி	3
ஏரக்காய்பட்டி - நத்தம்	4
நத்தம் - குட்டூர் விளக்கு	4
குட்டூர் விளக்கு - உலுப்பக்குடி	1
உலுப்பக்குடி - ஏரநாயக்கன்பட்டி	3
ஏரநாயக்கன்பட்டி - கருப்பர்கோவில் குதிரைகள்	3

Koviloor Digital Library
காப்பாற்ற வேண்டியது உன்பொறுப் பல்லாது
காசினியில் யார் பொறுப்பு?
மகன்கேட்டு தாய்எதுவும் மறுப்பதில் முறையில்லை
மனமிரங்கி வந்து அருள்க - அம்மா
வைத்தீஸ் வரன்கோவில் வளர்தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே.

(ஓம் சக்தி)

கவிஞர் - சிவல்புரி சிங்காரம்

மலையாண்டி மகிழ்வுருவான்!

அருள்நெறிக் கவிஞர்
அரிமழம் ப.செல்லப்பா

எத்தனையோ பக்திமலர்
இத்தரையில் மலர்வதுண்டு!
அத்தனையும் கந்தன்புகழ்

அற்புதமாய் சொல்வதுண்டு!
என்றாலும் **இராஜ அலங்காரம்**
இனியமலர் ஒன்றுமட்டும்
மன்றினிலே சிறப்பதுண்டு
மால்மருகன் அருளாலே!

விலையிலல்லா இம்மலரில்
வித்தகன்தன் பெருமைதனை
நிலையற்று பரிதவிக்கும்
நெஞ்சங்கள் அமைதியுற
கலைநயத்தோடு படைத்துள்ளார்!
கந்தன்புகழ் பதித்துள்ளார்!
மலையாண்டி மகிழ்வுருவான்!
மனம்மகிழ்ந்து அருள்புரிவான்!

Koviloor Digital Library

கருப்பர்கோவில் குதிரைகள் - கணவாய்பட்டி	1
கணவாய்பட்டி - கோபால்பட்டி	2
கோபால்பட்டி - உப்பாறு	3
உப்பாறு - மேட்டுப்பட்டி கடை	2
மேட்டுப்பட்டி கடை - சாணார்பட்டி	2
சாணார்பட்டி - கொசவபட்டி	1
கொசவபட்டி - இடைச்சிமடம்	1
இடைச்சிமடம் - விராலிப்பட்டி	1
விராலிப்பட்டி - நொச்சியோடைப்பட்டி	2
நொச்சியோடைப்பட்டி - ரெட்டியாபட்டி	3
ரெட்டியாபட்டி - திண்டுக்கல் பவர் ஹவுஸ்	4
திண்டுக்கல் பவர் ஹவுஸ் - அபிராமி அம்மன் கோவில்	4
அபிராமி அம்மன் கோவில் - ராமய்யன்பட்டி	4
ராமய்யன்பட்டி - ராஜாக்காபட்டி	2
ராஜாக்காபட்டி - இடையபட்டி	2
இடையபட்டி - முத்தனம்பட்டி	1
முத்தனம்பட்டி - பெருமாள்கோவில்	4
பெருமாள்கோவில் - ரெட்டியார் சத்திரம்	1
ரெட்டியார் சத்திரம் - செம்மடைப்பட்டி	7
செம்மடைப்பட்டி - புதுச்சத்திரம்	3
புதுச்சத்திரம் - சாலைப்புதூர்	3
சாலைப்புதூர் - ஒட்டன்சத்திரம்	1
ஒட்டன்சத்திரம் - குழந்தைவடிவேலன்	4
குழந்தைவடிவேலன் - விருப்பாட்சி	4
விருப்பாட்சி - சத்திரப்பட்டி	4
சத்திரப்பட்டி - சிந்தலவாம்பட்டி	4
சிந்தலவாம்பட்டி - கணக்கன்பட்டி	3
கணக்கன்பட்டி - பச்சளநாயக்கன்பட்டி	2
பச்சளநாயக்கன்பட்டி - பழைய ஆயக்குடி	2
பழைய ஆயக்குடி - புது ஆயக்குடி	1
புது ஆயக்குடி - இடும்பன்கோவில் மலைச்சரிவு	7

Koviloor Digital Library

யாத்திரையாய் செல்வோர்க்கு
யார்துணையும் தேவையில்லை!
மாத்திரையாய் இம்மலரோ
மாமருந்தாய் அருள்கூட்டும்!
நேர்த்தியாய் அச்சிட்டு
நிதம்படிக்கும் பாடல்களை
வார்த்தைகளில் பிழையின்றி
வனப்புடனே வழங்குகிறார்!

குருசாமி அருளாலே
குறைவின்றி மலர்ப்பணியும்
அருமையாய் நிறைவேறும்
அற்புதங்கள் தினம்நிகழும்!
பெருமைமிகு பாலசுப்பிரமணியன்
புகழ்மிக்க தலைமையிலே
இருநூறு ஆண்டுகள்
இனிமையுடன் இதுதிகழும்!

பழநிமலை தனைநோக்கி
பக்தியுடன் செல்வோர்க்கு
குழந்தைவேலன் உடன்வந்து
குறைகளைந்து துணைபுரிவான்!
நித்தமவன் நாமத்தை
நாவினிக்கப் பாடுங்கள்!
முத்தையன் தாள்பணிந்து
முருகனருள் பெற்றிடுங்கள்!

பிள்ளையார் சுழி

எதையும் எழுதத் துவங்குவோர் தாம் மேற்கொள்ளும் செயல் செம்மையாக முடிய வேண்டும் என்பதற்குப் பிள்ளையாரின் துணை வேண்டி இச்சுழியினைப் போடுகிறார்கள். பிள்ளையாரின் வடிவம் ஓங்கார வடிவம் அந்த ஓங்கார எழுத்து மருவிப் பிள்ளையார் சுழியாயிற்று என்பர் சிலர்.

Koviloor Digital Library

ஒலி வடிவமும், வரி வடிவமும் சேர்ந்து எழுத்தாகிறது. ஒலி வடிவைக் குறிப்பது வட்டம் "o". வரிவடிவைக் குறிப்பது கோடு. இந்த இரண்டும் சேர்ந்து தான் பிள்ளையார் சுழியாயிற்று. ஒலி வடிவம் `நாதம்' என்றும் வரிவடிவம் `விந்து' என்றும் சொல்லுவார்கள். உயிரும் உலகமும் உண்டாக இவ்விரண்டும் வேண்டும். இந்த எண்ணங்களெல்லாம் சேர்ந்து உள்ளத்தை அசைக்க உள்ளம் நம்முடைய கையை அசைக்க உருவாவது தான் பிள்ளையார் சுழி.

பலவகைக் கருத்துக்கள் நிலவியபோதிலும் எழுத்துப் பணி முட்டின்றி முடிய `கடவுளை வேண்டி' அஃதாவது சக்தியையும், சிவனையும் வேண்டி இடப்படும் குறியே `பிள்ளையார் சுழி' ஆகும்.

ஏன் குட்டிக்கொள்ளுகிறோம்?

பிள்ளையார் திருமுன் நின்று வணங்கும் போது இரண்டு கைகளாலும் தலையில் குட்டிக்கொள்கிறோம். ஏன்?

வடக்கேயிருந்து ஒரு நாள் அகத்தியர் தம்முடைய கமண்டலத்தில் கங்கை ஆற்று நீரை அடைத்துக் கொண்டு தெற்கே வந்தார். குடகு மலையில் அமர்ந்து கமண்டலத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சிவபூசை செய்துக்கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் இந்திரன் சீகாழியில் மறைந்திருந்து பூசை செய்து கொண்டிருந்தான். நெடுநாள் மழையில்லாமையால் பூசைக்குப் பூ கிடைக்கவில்லை. இதற்கு என்ன செய்வது என்று இந்திரன் கலங்கினான். அப்போது அங்கு வந்த நாரதர் அகத்திய முனிவருடைய கமண்டலத்திலிருக்கம் நீரை வெளியில் பாயும்படி செய்தால் நந்தவனம் செழிக்கும் என்றார்.

உடனே இந்திரன் பிள்ளையாரை வழிபட்டு அகத்தியரின் கமண்டல நீரை வெளியேற்றும்படி வேண்டினான். பிள்ளையார் காக்கை வடிவில் சென்று கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் காக்கையை கையசைத்து விரட்டினார். காக்கை கமண்டலத்தைக் காலால் உந்திவிட்டுப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்தது. கமண்டல நீர் காவிரியாகப் பெருக்கெடுத்தது.

ஸ்ரீ அருணாசலேஸ்வரர் தேவஸ்தானம், திருவண்ணாமலை

Koviloor Digital Library

திருவண்ணாமலை

ஸ்ரீ அண்ணாமலையார்



ஸ்ரீ உண்ணாமுலை அம்மை

Koviloor Digital Library

அகத்தியர் காக்கையைச் சீறினார். காக்கை ஒரு சிறுவனாக உருமாறி நின்றது. சிறுவனை இரண்டு கைகளாலும் தலையில் குட்ட ஓடினார் அகத்தியர். சிறுவனும் ஓடினான். அகத்தியர் மேலும் விரட்டிக் கொண்டே ஓடினார். பிள்ளையார் நம் உண்மை வடிவைக் காட்டவே திகைத்து விட்டார் அகத்தியர். பின்னர் அவர் பிள்ளையாரை வணங்கி `ஓங்காரப் பொருளே, உன்னைச் சிறியவன் என்று கருதிக் குட்டவந்த நானே சிறுவன்' என்று சொல்லித் தம் தலையில் குட்டிக்கொண்டார்.

பிள்ளையார், அன்பனே இன்று முதல் எம்திருமுன் பக்தியுடன் நின்று தம் தலையில் குட்டிக் கொள்வோர் கூரிய அறிவும், சீரிய செல்வமும் பெற்று வாழ்வர்' என்றார். அது முதல் ஏற்பட்டதுதான் இந்தக் குட்டிக்கொள்ளும் வணக்கமுறை.

திருவண்ணாமலை திருத்தலச் சிறப்பு வரலாறு

சைவத்தின் தலைநகரம் திருவண்ணாமலை, பஞ்ச பூதத் தலங்களில் அக்னியின் தலம் இது. அக்னியே அனைத்துக்கும் மூலம்!

முக்தி பற்றி பேசும் போது திருவாரூரில் பிறக்க முக்தி, காசியில் இறக்க முக்தி, தில்லை (சிதம்பரம்) தரிசிக்க முக்தி, திருவண்ணாமலையோ - "நினைத்தாலே முக்தி" என்பார்கள்.

அருணை, அருணாச்சலம், முக்திபுரி, சிவலோகம், அண்ணா நாடு போன்றவை திருவண்ணாமலைக்கு உரிய வேறு பெயர்கள்.

இங்கு தல விருட்சம் மகிட மரம்.

மகிடாசுரனை துர்க்கை சம்ஹரித்தது இங்குதான். ஞானிகளுக்கு வீடு திருவண்ணாமலை. "சித்தர்களின் சரணாலயம்" என்றும் சொல்லலாம்.

Koviloor Digital Library

இங்கு அடிக்கு ஆயிரத்து எட்டு லிங்கம் என்பார்கள். அதனால் பலர் செருப்பு அணிவது இல்லை.

"திருப்புகழ்" பாடிய அருணகிரி இங்குதான் பிறந்தார். திருவண்ணாமலையில் இவர் பாடிய திருப்புகழ் எழுபத்தி ஒன்பது. அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் வைத்து திருமுருகக் காட்சி இரு முறை இவருக்குக் கிடைத்து இருக்கிறது.

வரலாற்று சிறப்பு மிக்க இக்கோயிலுக்கு அனேக மன்னர்கள் திருப்பணி செய்து இருக்கிறார்கள்.

திருவண்ணாமலையை ஆண்ட வல்லாள மகராசனுக்கு இறைவனே மகனாய் வந்து கலி தீர்த்து இருக்கிறார்.

சிவன் கோயிலில் காமதகனம் நடைபெறுவதும், அம்மன் சந்நிதி முன்பாக தீமிதி நடைபெறுவதும் இந்தத் திருத்தலத்தில் மட்டுந்தான்.

இவ்வூரில் மட்டுமே மாணிக்க வாசகருக்குத் தனிக் கோயில் உள்ளது.

இங்கு வாழ்ந்து மறைந்த மகான்களின் எண்ணிக்கைக்குக் கணக்கே இல்லை.

சேஷாத்ரி சுவாமிகள் தொட்டு ரமணர் வரை எத்தனையோ மகான்கள் தலத்தின் மகிமையை உலகம் அறியச் செய்து இருக்கிறார்கள். அவர்கள் வழியில் அண்மையில் மறைந்த ராம்சுரத்குமார் என்கிற யோகியின் பணியும் குறிப்பிடத்தக்கது.

இங்கே, அருணாசலேஸ்வரர் கிரியாக மட்டுமா திகழ்கிறார், யோகியர்க்கும், ஞானியர்க்கும் குருவாக லிங்கோற்பவராக அல்லவா வீற்றிருக்கிறார்!

Koviloor Digital Library

இந்திய மண்ணில் இருக்கும் உத்தம சிவத்தலங்கள் அறுபத்தி எட்டு ஆகும். இவற்றில் குறிப்பிடத்தக்கவை கயா, பிரயாகை, ஸ்ரீ சைலம், மதுரா, கேதாரம், கைலாயம், காஞ்சி, காசி, திருவாரூர், சிதம்பரம், இராமேச்வரம் முதலியனவாகும். இவற்றில் யாகம், தானம், நீராடல் செய்து முக்திப் பேற்றை பெறுவது எல்லோருக்கும் சாத்தியமாகிற காரியமில்லை. இயலாதார்க்கு எண்ணிய போதே எளிதில் முக்தி அளிக்கிற தலம் திருவண்ணாமலை.

சிவனுக்குரிய தலம் மட்டும் அல்ல, அவனுடைய பிரியத்துக்குரிய புனிதத் தலமும் திருவண்ணாமலையே. இத்தலத்தை வந்தடைய ஒன்பது வழிகள் உண்டு. எவ்வழியில் வ்ந்தாலும் பத்து கல் தொலைவில் இருக்கும்போதே அருணையங்கிரி அற்புதமாகக் காட்சி தரும்.

அருணாசலம் கயிலையங்கிரியினும் உயர்வானதாக மகான்களால் கருதப்படுகிறது. ஞானிகளும், யோகிகளும், சாதுக்களும், தேவர்களும் தேடி வந்து வழிபடுகின்றனர். எல்லா உயிரினங்களுக்கும் இது ஆதாரத் தலம். எனவே, ஏதாவது ஒரு பொழுதில் எல்லோரும் இந்த மண்ணில் கால் பதிக்கும்படி ஆகம்.

கடுமையான சாதனைகள் ஏதுமின்றி, ஞானத்தை கையளிக்கும் இடம் திருவண்ணாமலை, சாதகர்களுக்கு தன் முயற்சியில் தானாகவே ஞானம் வந்து விடுகிறது.

பாவத்தை மட்டுமன்றி ஆவணத்தையும் இறக்கி வைக்கும் இடம் திருவண்ணாமலை. அடி, முடி காண முயன்று அயனும், அரியும் அகந்தை இழந்த இடமல்லவா இது!

பார்வதி அம்மையும் அண்ணலின் இடப்பாகத்தே இடம் பெற்று அமர தவமியற்றியதும் இங்குதான்.

"அருணன்" என்றால் வினைகளை அகற்றுபவன் என்று பொருள் கொள்வர். அருணாச்சலத்தைக் கண்டவுடன் அது நாள் வரை ஒருவன் பெற்றிருந்த வினைப் பயன்கள் முற்றாய் அழிகின்றன என்பதில் ஐயம் இல்லை.

Koviloor Digital Library

திருவண்ணாமலையில் செய்யப்படுகிற யாகமும், தானமும், நீராடலும், தியானமும், செபமும் அளவற்ற நன்மை பயப்பதாகும். இம்மலைச் சிகரத்தை சற்றே நோக்கிடினும் கர்மாக்கள் தொலைகின்றன. மனதாலும், வாக்காலும், உடலாலும் புரிந்த தீமைகள் எல்லாம் ஒரு பார்வையில் அழிந்து விடுகின்றன.

உடற் பிணி மட்டுமின்றி, மனப் பிணியும் நீக்கும் மருத்துவ மலை திருவண்ணாமலை. இத்தலத்தில் நந்தவனம் அமைத்திடுவோரும், பூத்தொடுப்போரும், பூசனை செய்வோரும், ஆலயத்தில் அலகிடுவோரும், மெழுகிடுவோரும், ஆலயத் திருப்பணி செய்வோரும், திருக்குளம் சீரமைப்போரும் எற்றமுடன் வாழ்கின்றனர்.

திருவண்ணாமலைத் தலமே ஸ்ரீ சக்கர வடிவில் அமைந்துள்ளது. இதனை " நவத்துவாரபுரி" என்றும் கூறுவர். இங்கு சைவர்கள் மட்டுமன்றி சாக்தர்களும், வைணவரும், சமணரும் இன்ன பிற சமயத்தவரும் தத்தமது சாதனைகள் நிமித்தம் அண்ணாமலைக் குகைகளில் வாழ்ந்திருந்தனர். சிறு சிறு மடாலயங்களை நிறுவிக் கொண்டும் இருந்திருக்கின்றனர். அண்ணாமலையில் ஐக்கியப்படுவதோடு அவர்கள் சாதனை முற்றுப் பெறுகிறது.

திருவண்ணாமலைக்கு அக்காலத்தில் "அண்ணாநாடு" என்ற பெயரும் வழங்கி வந்தது. தொல்காப்பிய உரையில் "அண்ணாத் தேரி" என்ற சொல் வருகிறது. இது அண்ணா என்னும் ஊரில் உள்ள ஏரி சொல் வருகிறது. இது அண்ணா என்னும் ஊரில் உள்ள ஏரி என்ற பொருளை உடையது. இவ்வூரை உள்ளிட்ட நாடு அண்ணா நாடு என்றும், இவ்வூரில் உள்ள மலை அண்ணாமலை என்றும் ஆயிற்று.

பறவைக்கும், விலங்கினங்கட்கும், குருடருக்கும் மற்ற தலங்களில் தரிசனம் கிடைக்காது. ஆனால் திருவண்ணாமலை நினைத்ததுமே முக்தி தருவது.

Koviloor Digital Library

இவ்வூரில் உள்ள கற்களெல்லாம் லிங்கங்கள், மரங்கள் எல்லாம் கற்பக மரங்கள், நீரெல்லாம் கங்கையென புனிதம் பெற்றன.

ஆன்மீகத்தில் அருணைக்கு நிகர் என்றோ, அருணையை விட மேம்பட்டதென்றோ தலம் ஏதும் இல்லை.

அண்ணாமலையைச் சுற்றி இருக்கும் நீர் நிலைகளும் அண்ணலின் வடிவை தம்முள் ஏந்திப் பிரதிபலிக்கின்றன.

திருவண்ணாமலை முதலில் பல்லவர் கையில் இருந்தது. பின்பு ராஷ்டிரகூட மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டது. இவர்களில் மூன்றாவது கிருஷ்ணா என்னும் மன்னன் இக்கோவிலுக்கு பத்தாம் நூற்றாண்டில் திருப்பணி செய்தான். பின்பு, சம்புவராயர் போன்ற குறுநில மன்னர்கள் கையில் மூன்று நூற்றாண்டு காலம் இருந்து இருக்கிறது. பிறகு, ஹொய்ஸால மன்னர்கள் திருவண்ணாமலையை தலை நகராகக் கொண்டனர். அதன் பிறகு, விஜயநகரப் பேரரசர்கள் இக்கோயிலுக்கு அரும்பெரும் திருப்பணிகள் செய்துள்ளனர்.

திருவண்ணாமலை மண்ணை மிதித்த மகான்கள் தமது இறுதிக் காலம் வரையிலும் இத்தலத்தின் எல்லை தாண்ட விரும்பவில்லை. சேஷாத்ரி சுவாமிகளும் சரி, பகவான் ரமணரும் சரி, அப்படித்தான் இருந்தனர். திருவண்ணாமலையிலேயே சமாதியுற்றனர்.

திருவண்ணாமலை ஒரு காந்தமலை என்றுதான் சொல்ல வேண்டும். காந்தம் இரும்புத் துகள்களை தன் வசம் ஈர்க்கிற மாதிரி, உலகத்து மகான்களை எல்லாம் தன்னிடம் இழுத்துக் கொண்ட புண்ணிய பூமி அல்லவா இது!

குபேர மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் தனநாயிகாயை
ஸ்வர்ணா கர்ஷன தேவ்யாயை
ஸ்ர்வ தாரித்திரிய நிவாரணாயை
ஓம் ஹ்ரீம் ஸ்வா ஹா.

Koviloor Digital Library

பஞ்சாமிர்தம்	-	உடல் வலிமை
அன்னம்	-	அபமிருத்து
மாப்பொடி	-	கடன் தீரும்
தேன்	-	இன்பம்

தீபம் ஏற்றும் பலன்கள்

நெய்தீபம்	-	ஞானம்
எள் எண்ணெய்	-	எமபயம் நீங்கும்
இலுப்பெண்ணெய்	-	ஆரோக்கியம் தரும்
ஆமணக்கு	-	சகல சம்பத்தும் ஏற்படும்
வெண்கல விளக்கு	-	பாபம் போகும்
இரும்பு அகல்	-	அபமிருத்யுவை போக்கும்
மண் அகல்	-	வீர்ய விருத்தி

தானத்தின் பலன்கள்

அன்னதானம்	-	தரித்திரமும் கடனும் நீங்கும்
வஸ்திர தானம்	-	ஆயுளை விருத்தி செய்யும்
தேன் தானம்	-	புத்திரபாக்கியம் உண்டாகும்
நெல்லிக்கனி தானம்	-	ஞானம் உண்டாகும்
தீப தானம்	-	கண்பார்வை தீர்க்கமாகும்
அரிசி தானம்	-	பாவங்களை போக்கும்
நெய்தானம்	-	நோய்தீர்க்கும்
பால்தானம்	-	துக்கம் நீங்கும்
தயிர்தானம்	-	இந்திரிய விருத்தி
பழங்கள் தானம்	-	புத்தியும் சித்தியும் கிட்டும்
தங்க தானம்	-	குடும்ப தோஷங்கள் நீங்கும்
வெள்ளி தானம்	-	மனக்கவலை நீங்கும்
கோதானம்	-	ரிஷிகடன் தேவர்கடன் பிதுர்கடன் அகலும்
தேங்காய் தானம்	-	நினைத்த காரியம் வெற்றியாகும்
பூமி தானம்	-	பிரம்மலோகத்தையும் ஈஸ்வர தரிசனத்தையும் நல்கும்

Koviloor Digital Library

விரதத்தின் பலன்கள்

சங்கடஹர சதுர்த்தி	-	சங்கடங்கள் நீங்கும்
விநாயகர் சதுர்த்தி	-	விக்னங்கள் நீங்கும்
சிரவணம் (திருவோணம்)	-	குடும்ப ஒற்றுமை ஆனந்தம்
வைகுண்ட ஏகாதசி	-	வறுமை நீங்கும் செல்வம் கொழிக்கும்
சஷ்டி விரதம்	-	எண்ணியது கிட்டும் புண்ணியம் பலன் பெறும்
கார்த்திகை	-	செல்வம், கல்வி, ஆயுள் நல்ல மனைவி மக்கட்பேறு கிடைக்கும்
கௌரி விரதம்	-	மாங்கல்ய பாக்கியத்திற்கு
வரலெக்ஷ்மி விரதம்	-	1. கன்னிப் பெண்கள் நல்ல கணவனை அடைய 2. திருமணமான தம்பதிகளுக்கு ஒற்றுமை உண்டாகும்
பிரதோஷம்	-	மன அமைதியும், நீண்ட ஆயுளும், வாழ்வில் எல்லாவித நன்மைகளும் கிடைக்கும்
மகாசிவராத்திரி	-	சிவபெருமானின் அருளால் வாழ்வில் எல்லாவித நன்மைகளும் கிடைக்கும்
வைகாசி விரதம்	-	குழந்தைப் பேறு உண்டாக
சிவராத்திரி விரதம்	-	சகல சௌபாக்கியமும் உண்டாகும்
கோகுலாஷ்டமி	-	மனநலம் நீண்ட ஆயுள், செல்வம் உண்டாகும்
அமாவாசை	-	பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்ய உகந்தது.
பௌர்ணமி	-	கஷ்டங்கள் விலகும்

Koviloor Digital Library

ஸ்ரீ சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள திருத்தலங்கள்

காஞ்சிபுரத்தில்	-	ஸ்ரீ காமாட்சி அம்மன்
சென்னையில்	-	தம்புசெட்டித் தெருவில் ஸ்ரீ காளிகாம்பாள்
திருவொற்றியூர்	-	ஸ்ரீ வடிவாம்பிகை
மாங்காடு	-	ஸ்ரீ காமாக்ஷியம்மன்

போன்ற கோயில்களில் ஸ்ரீ அம்பாள் சன்னதியில் ஸ்ரீ சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்ட இடங்களாகும்.

"கிரி வலத்தில்"

அஷ்ட லிங்கங்களில் ஸ்ரீ அண்ணாமலையார் தரிசனம்

சிவபெருமானில் ஸ்ரீ சஸ்தளங்களில் ஒன்றான அக்கினிஸ்தலம் எனப்படும் திருவண்ணாமலையில் மாதந்தோறும் பௌர்ணமி இரவில் பல ஆண்டுகளாக மக்கள் கிரிவலம் வருகின்றனர். இந்த சுற்று பிரகாரத்தில் எட்டு வகையான லிங்கங்கள் உள்ளன. இந்த லிங்கங்களை தரிசனம் செய்து கடைசியாக அண்ணாமலையாரை தரிசனம் செய்தால் நினைத்த காரியம், குடும்பசௌகரியங்கள் கிடைக்கும் என்பது மரபு.

திக்குகள் எட்டு:- அலை, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்க்கு, வடமேற்க்கு.

திக்கு தேவதைகள்:-

கிழக்கு	-	இந்திர லிங்கம்,
தென்கிழக்கு	-	அக்னிலிங்கம்,
தெற்கு	-	யமலிங்கம்,
தென்மேற்கு	-	திருதிலிங்கம்,
மேற்கு	-	வருணலிங்கம்
வடமேற்க்கு	-	வாயுலிங்கம்
வடக்கு	-	குபேரலிங்கம்
வடகிழக்கு	-	ஈசானலிங்கம்

Koviloor Digital Library
என கிரிவலப் பாதையில் அமைக்கப்பட்டுள்ள எட்டு லிங்கங்களும் அந்த திக்கு தேவதைகளின் பெயராலேயே அழைக்கப்படுகின்றன.

பிரதட்சிணம்

விநாயகருக்கு ஒரு பிரதட்சிணம்.
சூரியனுக்கு இரண்டு பிரதட்சிணம்
பரமேஸ்வரன். அம்பாளுக்கு மூன்று
பிரதட்சிணம். ஸ்ரீ விஷ்ணு. ஸ்ரீ லட்சுமி.
மகான்களின் சமாதிகளுக்கு நான்கு. அரச
மரத்துக்கு எழு. நவகிரத்திற்கு ஒன்பது.
இப்படி பிரதட்சிணம் செய்யும் போது
நிதானத்துடன் அடிமேல் அடி வைத்து
ஸ்தோத்திரங்களைச் சொல்லிக் கொண்டே
அமைதியுடன் தூய உள்ளத்துடனும் செய்ய
வேண்டும்.

திரிகளின் வகை

பஞ்சு:	இதில் திரியிடுவது மிகவும் நல்லது.
தாமரைத்தண்டு:	திரித்து ஏற்றுவது முன்வினைப் பாவத்தை போக்கும். செல்வம் பெருகும்.
வாழைத்தண்டு:	இதை நூல் பாகமாக பக்குவப்படுத்தி திரியிட குழந்தை செல்வம் உண்டாகும். தெய்வகுற்றம். குடும்ப சாபம் முதலியவை நீங்கி சாந்தி உண்டாகும்.
வெள்ளை எருக்கன்:	இதன் பட்டையை திரியாக செய்து தீபம் போட பெருத்த செல்வம் தரும்.

தீப வழிபாடு

தீப வழிபாட்டு முறைகளை பயிலுபவர்கள் அதிகாலை நாலரை மணிக்கு தீபம் ஏற்றி ஆறு மணி வரை தீபவழிபாடு செய்ய வேண்டும். மாலையில் ஐந்தரை மணிக்கு தீபம் எற்றி ஆறு மணி

Koviloor Digital Library

வரை தீப வழிபாடு செய்ய வேண்டும். அதாவது காலையில் 1 1/2 மணி நேரமும், மாலை 1/2 மணி நேரமும் தீப வழிபாடு செய்ய வேண்டும். இது தான் தீப வழிபாட்டு முறைகள். இப்படிச் செய்வதால் செல்வமும், நீடித்த ஆயுளும், மன ஒருமைப்பாடும் கிடைக்கும். தீபத்தை நோக்கி அமரும் திசைகளும், அதற்கேற்ற பலன்களும் உண்டு. கிழக்கு திசையை நோக்கி தீபம் எரிந்தால் எல்லா விதமான தோஷங்களும் நீங்கி அந்த வீட்டில் செல்வம் உண்டாகும். வடக்கு திசையை நோக்கி தீபம் எரிந்தால் அந்த வீட்டில் சந்தோஷமும், அமைதியும், ஞானமும், செல்வப்பருக்கும் உண்டாகும். தீப வழிபாட்டுக்கும், பிரார்த்தனைகளுக்கும் சிறந்த திசையாகும். மேற்கு திசையை நோக்கி தீபம் எரியக் கூடாது அதனால் கடன்தொல்லைகள், பகை அமைதியின்மை போன்றவைகள் உண்டாகும். தெற்கு திசையை நோக்கி தீபம் எரியக் கூடாது. அதனால் சகுனத்தடைகளும், தரித்திரமும், புத்திசுவாதீனமும் உண்டாகம்.

சிகப்புநிறத் துணித்திரி விளக்கில் எரிந்தால் திருமணத் தடைகள் விலகிப் போய் விடும். மேலும் ஆண், பெண் மலட்டுத் தன்மைகள் நீங்கி புத்திரபாக்கியம் உண்டாகும். அத்துடன் தோஷங்களும் ஒழிந்து போகும். வெள்ளைநிறத் துணித்திரி விளக்கில் எரிந்தால் செல்வம் பொழியும். குடும்பத்தில் சாந்தியும், சந்தோஷமும் நிலைத்து இருக்கும். எப்பொழுது விளக்கு ஏற்றினாலும் கிழக்கு, வடக்கு முகமாகவே தீபம் எரிய வேண்டும். அதனால் அனேக நன்மைகள் ஏற்படும்.

தீப வழிபாட்டு முறைகள் என்ற புத்தகத்தில் இருந்து மேலும் சில குறிப்புகள் பஞ்சினால் ஆன விளக்குத்திரி ஏற்றினால் வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும், மங்களம் உண்டாகும். காய்ந்த தாமரைத் தண்டின் திரி ஏற்றினால் முன் செய்த பாவங்கள் எல்லாம் நீங்கி செல்வம் பெருகும். காய்ந்த வாழைத் தண்டின் நார்த்திரி ஏற்றினால் பெரும் தெய்வ குற்றங்கள் அகன்று புத்திரபாக்கியம் உண்டாகும். வெள்ளை எருக்கின் பட்டைத்திரி ஏற்றினால் புதையல்கள் கிடைக்கும் அல்லது திடீர் லாட்டரி பரிசுகள் கிடைத்து

Koviloor Digital Library

செல்வமும், செழிப்பும் வந்து சேரும். புது மஞ்சள் துணித்திரி ஏற்றினால் பில்லி சூனியம், ஏவல், பேய்க்காற்று மறைமுக தொல்லைகள், தீராத வியாதிகள் எல்லாம் விலகிப் போய்விடும். தீப ஆராத்தி எடுக்கும் முறைகள்: பண்டிகை காலங்களில் உங்கள் இஷ்ட தெய்வங்களுக்கு ஆரத்தி செய்யும் போது ஒரு கிண்ணத்தில் மஞ்சளையும், குங்குமத்தையும் தண்ணீர் விட்டு கரைத்து ஆரத்தி தட்டில் வைத்துக் கொண்டு இரண்டு சின்ன நெய் விளக்கு எற்றி ஆரத்தி செய்யவும். அதன் பிறகு ஆரத்தி நீர் கிண்ணத்தை எடுத்து துளசி செடியில் ஊற்றி விடவும். பெரிய மனிதர்களுக்கு ஆரத்தி எடுக்கும்பொழுது ஆரத்தி தட்டில் ஒரு சின்ன கிண்ணத்தில் சுண்ணாம்பு, மஞ்சள் தூளும் போட்டு தண்ணீர் விட்டு கரைத்த கலவையை தட்டில் வைக்கவும். அத்துடன் இரண்டு சின்ன வெள்ளைத் துணித்திரி விளக்கு ஏற்றி வைத்து ஆரத்தி செய்யயும். அதன் பிறகு மஞ்சளும், சுண்ணாம்பும் கரைத்த நீரை முச்சந்தியில் கொட்டி விடவும். இப்படி செய்தால் அந்த பெரிய மனிதரின் திருஷ்டி கழிந்து நீடித்த ஆயுள் உண்டாகும். அதேபோல் பிறந்த தினம் கொண்டாடுபவர்களுக்கு செய்தால் அவர்களுக்கு ஆயுள் நீடிக்கும், தீருஷ்டி கழியும்.

பகவத்கீதை

"கர்மத்தில் ஈடுபட, பலனை எதிர்பார்க்காதே, பலனை நோக்கமாகக் கொண்டு காரியத்தைச் செய்யாமல் இருந்துவிடாதே".

"எவன் ஒருவன் பலனை எதிர்பாராமல் கடைமையைச் செய்கிறானோ, அவனே முனிவன், அவனே யோகி-இதற்கு எதிர்மாறானவனிடம் சடங்குகளை எதிர் பார்க்கமுடியாது".

நீ எதைச் செய்தாலும், எதைப் பரிசாக அளித்தாலும், எதை சிக்கனப்படுத்தினாலும், அதை நீ எனக்காகச் செய்.

இப்படியெல்லாம் செய்வதன் மூலம் வெற்றி - தோல்வி, நன்மை - தீமை, இன்பம்-துன்பம் ஆகிய பந்தங்களிலிருந்து உன்னை நீயே விடுவித்துக் கொள்ளுவாய்.

Koviloor Digital Library

குபேர பூஜை

பூஜை அறையில் நன்கு சுத்தம் செய்யப்பட்ட அல்லது புது குடம் (அ) செம்பு வைத்து குடத்தினுள் பச்சை கற்பூரம், குங்குமப்பூ, ஏலக்காய் முதலியவற்றைப் போட்டு அதில் நீர் ஊற்றி நிரம்பச் செய்ய வேண்டும். அதன் மேல் மாவிலை கொத்தை வைத்து நடுவே சந்தனம், குங்குமம் வைத்த தேங்காயை வைத்து மாலைகள் போட்டு, குபேரன் அல்லது மகாலெட்சுமி படம் முன்னர் வைத்து மனதில் பக்தியோடு தூபம் காட்டி, நெய் திரியிட்ட தீபம் காட்ட வேண்டும்.

பின்னர் பழம், பொங்கல், வெற்றிலைப் பாக்கு வைத்து நிவேதனம் செய்து வணங்க வேண்டும். மேலும் பூஜையில் தங்கக்காசு அல்லது வெள்ளிக்காசு அல்லது புதிய ரூபாய் நோட்டுகள் வைத்து வணங்க வேண்டும். மல்லிகை அல்லது ரோஜா பூக்கள் வைத்து வணங்க வேண்டும்.

அந்தக் கலசத்தின் முன் மலர்களால் அர்ச்சனை செய்து

'ஓம் குபேராய நம: ஓம் மகா லெட்சுமியை நமஹ"

என 108 முறை அல்லது 1008 முறை சொல்ல வேண்டும். பின்னர் கலசத்தில் உள்ள நீரை அனைவருக்கும் பிரசாதமாக தர வேண்டும். இவ்விரதம் மேற்கொள்ள, லெட்சுமி அருள் கிடைக்கும். செல்வம் பெருகும்.

தெரிந்து கொள்ள வேண்டிய திருத்தலங்கள்

1. திருநெல்வேலி மாவட்டத்தில் புதூரில் உள்ள கோயிலில் விநாயகர் யானை மீது அமர்ந்து காட்சி தருகிறார். சென்னைக்கு அருகிலுள்ள திருவொற்றியூரில் உள்ள திருக்கோவிலில் சிங்கத்தின் மீது அமர்ந்து விநாயகர் காட்சி தருகிறார்.

2. தில்லை சிதம்பரத்தில் பைரவ மூர்த்தியை விழாக் காலங்களில் எழுந்தருளச் செய்து சிறப்பாக ஆராதனை செய்வர். இத் திருகாட்சியைக் இன்றும் காணலாம்.

Koviloor Digital Library

3. திருமலையில் அருள் பாலிக்கும் வேங்கடவன் சக்கரம் ஸ்வர்ணாகர்ஷண சக்கரம் என்பதால் தினமும் பொன்னும் பொருளும் குவியும் திருப்பதியாக அது திகழ்கிறது என்று இறையன்பர்கள் கூறுவர்.

4. பெங்களூரில் பசவங்குடியில் கோயில் கொண்டுள்ள நந்தி பகவான் தானே உருவாகி வளர்ந்ததாகும். ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் ஜாத்ரா உற்சவமும் பல்லக்கு ஊர்வலமும் நடைபெறுகிறது. சுமார் 15 அடி உயரம் உள்ள, காலை மடித்து அமர்ந்து இருக்கும் இந்த ரிஷப விக்ரகத்துக்கு ஏணியைச் சாய்த்து மேலே ஏறி மாலை அணிவிப்பார்கள்.

5. சாதரணமாக அனைத்து கோவில்களிலும் ஸ்ரீ மஹா லக்ஷ்மி பட்டாடைகளையுடுத்தி திருவாபணரங்களுடன் தான் பக்தர்களுக்கு திவ்விய தரிசனம் தந்தருள்கிறார்கள் ஆனால் ஆந்திராவில் மங்களகிரி என்ற திருத்தலத்திலுள்ள கோவிலில் ஸ்ரீ மஹா லக்ஷ்மி எளிய தவக்கோலத்தில் காட்சி தந்து மக்களுக்குப் பேரருள் புரிந்து வருகிறாள்.

அபிஷேக பயன்கள்

ஜல அபிஷேகம்	-	மன அமைதி
வாசனை திரவியம்	-	ஆயுள் விருத்தி
சந்தனம்	-	செல்வ விருத்தி
பால்	-	நீண்ட வாழ்வு
தயிர்	-	புத்திர விருத்தி
நெய்	-	மோட்சம்
இளநீர்	-	சமசீதோஷ்ணம்
நார்த்தம் பழம்	-	நேர்மை, அறிவு, விருத்தி
பச்சைக் கற்பூரம்	-	பயத்தை நீக்கும்
கஸ்தூரி	-	வெற்றி
பன்னீர்	-	சாலோக்கியம்
மஞ்சள் பொடி	-	ராஜவசியம்
நல்லெண்ணெய்	-	சுகம்

Koviloor Digital Library

இந்த உலகில் தர்மம் அழிந்து, அதர்மம் மேலாங்கும் போது நல்லோரை காக்கவும், தீயவர்களை அழிக்கவும் தருமத்தை நிலை நாட்டவும், நான் அவ்வப்போது பிறக்கிறேன்.

ஆன்மா பிறப்பற்றது, என்றுமுள்ளது, நிலையானது, சரீரம் கொல்லப்படும் பொழுதும் ஆன்மா கொல்லப்படுவதில்லை. ஆன்மா வெட்டவோ, எரிக்கவோ, நனைக்கவோ, உலர்த்தவோ முடியாதது, நிலையானது, எங்கும் பரவியது இன்றும், என்றும் புதியது.

ஒரு சமயத்தில் இல்லாமலிருந்து பிறகு உண்டானது என்பதுமில்லை. அம்மாதிரியே ஒரு சமயம் இருந்து, பிறகு இல்லாமல் இருந்தது என்பதுமில்லை.

ஸ்ரீ கிருஷ்ண பகவான்.

வாழ்க்கை

வாழ்க்கை என்பது வெறுப்பானது அதில்
வெற்றி காண்பதே சிறப்பானது.

நிறங்களும், குணங்களும்

(உங்களுக்கு பிடித்த நிறத்தைக் கொண்டு உங்களை அறியலாம்)

1. வெண்ணிறம் - சமாதானத்தின் சின்னம்-நோக்கம், நேர்மை
2. கறுப்பு (உழைப்பு-கடின உழைப்பு, நிர்வாகத்திறன்
3. சிவப்பு (துணிவு) ஒழுக்கம், கோபம்
4. மஞ்சள் (மங்களம்) செல்வம், அதிர்ஷ்டம்
5. பச்சை (பசுமை) வேகம், சாதுரியம்
6. ஆரஞ்சு (துறவு) கடமை, உண்மை
7. பழுப்பு (அமைதி) நிதானம், அறிவு
8. நீலம் (பொறுமை) விட்டு கொடுக்கும் மனம்

Koviloor Digital Library

01. வடக்கிழக்கில் பூஜை அறை இருந்தால் சாலச் சிறப்பு.
02. தென்கிழக்கில் சமையல் அறை இருப்பது நன்மை தரும்.
03. தென் மேற்கில் படுக்கை அறை இருப்பது நல்லது.
04. வடக்கு, கிழக்கு முக வீடு செல்வத்தின் வரவு.
05. தென் மேற்கிலும், தென் கிழக்கிலும் கிணறு/ போர் இருக்கக்கூடாது.
06. வடகிழக்கில் கிணறு/போர் இருந்தால் வீட்டிற்கு மங்களம் உண்டாகும்.
07. வடகிழக்கில் அடுப்பு, கழிப்பறை ஐசுவரியத்தை தடுக்கும்.
08. தென்மேற்கு பார்த்த வீடு கூடாது.
09. வடக்கு, கிழக்கு வெற்றிடம் செல்வத்தின் சேர்க்கை.
10. தெற்கில் மேடு நன்மையின் வரவு.

இராசிபடி - அதிர்ஷ்ட இரத்தினம், அதிர்ஷ்ட நிறம்

மேஷம், விருச்சிகம்	-	பவளம், நல்ல சிவப்பு
ரிஷபம், துலாம்	-	வைரம், வெண்மை
மிதுனம், கன்னி	-	பச்சை கல், பச்சை
கடகம்	-	முத்து, வெண்மை
சிம்மம்	-	மாணிக்கம், சிவப்பு
தனுசு, மீனம்	-	புஷ்பராகம், மஞ்சள்
மகரம், கும்பம்	-	நீலக்கல், கறுப்பு

எண்**	தேவதை	நிறம்	இரத்தினம்
1.	சிவன்	சிவப்பு	மாணிக்கம்
2.	விஷ்ணு	சந்தனம்	முத்து
3.	தட்சிணாமூர்த்தி	மஞ்சள்	தக்கம்
4.	முருகன்	பலவண்ணம்	கோமேதகம்
5.	விஷ்ணு	பச்சை	மரகதம்
6.	மகாலட்சுமி	வெண்மை	வைரம்
7.	பிள்ளையார்	சிவப்பு	வைடூரியம்
8.	சனீஸ்வரர்	கறுப்பு	நீலக்கல்
9.	முருகன்	சிவப்பு	பவளம்

** பிறந்த தேதியின் கூட்டுத்தொகை

Koviloor Digital Library

12 ராசி, 12 மாதம், 12 ஆலயம்
(கும்பகோணம்) குடந்தை நகரில்
12 ராசிகளுக்கும் 12 ஆலயங்கள் உள்ளன
இதில் 12 மாதங்களுக்கும் தொடர்பு உண்டு

1. சித்திரை-மேஷம்-ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலயம்
2. வைகாசி-ரிஷபம்-ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி ஆலயம்
3. ஆனி-மிதுனம்-ஸ்ரீ சக்ரபாணி சுவாமி ஆலயம்
4. ஆடி-கடகம்-ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம்
5. ஆவணி-சிம்மம்-பாணபுரீஸ்வரர் ஆலயம்
6. புரட்டாசி-கன்னி-காசிவிஸ்வநாதர் ஆலயம்
7. ஐப்பசி-துலாம்-அபிமுகேஸ்வரர் ஆலயம்
8. கார்த்திகை-விருச்சிகம்-கவுதமேஸ்வர் ஆலயம்
9. மார்கழி-தனுர்-நாகேஸ்வரர் ஆலயம்
10. தை-மகரம்-சோமேஸ்வரர் ஆலயம்
11. மாசி-கும்பம்-கும்பேஸ்வரர் ஆலயம்
12. பங்குனி-மீனம்-ஸ்ரீ பிரமன் ஆலயம்

வெற்றியின் ரகசியம்

அன்பு காட்டுங்கள்	-	ஆனால் அடிமையாகிவிடாதீர்கள்
இரக்கம் காட்டுங்கள்	-	ஆனால் ஏமாந்துபோகாதீர்கள்
பணிவாய் இருங்கள்	-	ஆனால் கோழையாய்இராதீர்கள்
கண்டிப்பாய் இருங்கள்	-	ஆனால் கோபப்படாதீர்கள்
சிக்கனமாய் இருங்கள்	-	ஆனால் கஞ்சனாய்இராதீர்கள்
சுறுசுறுப்பாய் இருங்கள்	-	ஆனால் பதட்டப்படாதீர்கள்
தர்மம் செய்யுங்கள்	-	ஆனால் ஆண்டியாகிவிடாதீர்கள்
பொருளைத் தேடுங்கள்	-	ஆனால் பேராசைப்படாதீர்கள்
உழைப்பை நம்புங்கள்	-	ஆனால் கடவுளை மறந்துவிடாதீர்கள்

Koviloor Digital Library

பெண்கள் மாங்கல்ய மகிமை

பெண்கள் கழுத்தில் அணியும் மாங்கல்யம் 9 இழைகளைக் கொண்டது அவை ஒவ்வொன்றும் ஒரு குணத்தைக் குறிப்பன.

1 வாழ்க்கையை புரிந்து கொள்வது
2. மேன்மை
3. ஆற்றல்
4. தூய்மை
5. தெய்வீக எண்ணம்
6. நற்குணங்கள்
7. விவேகம்
8. தன்னடக்கம்
9. தொண்டு.

சிவபூசையில் முருகன்

சூரபத்மனை வதம் செய்த பிறகு முருகப் பெருமான். திருச்செந்தூரில் சிவபூசை செய்திருக்கின்றார். அபிஷேகம் செய்யத் தேவையான தண்ணீருக்காக. தனது கையில் இருந்த வேலை எறிந்து ஸ்கந்த புஷ்கரணி என்ற தீர்த்தத்தைத் தோற்றுவித்தார். கருவறையில் சூரசம்ஷ்ரரீர மூர்த்தியான முருகப்பெருமான் கையில் ருத்ராட்சமாலையும். அர்ச்சனை செய்ய மலர்களும் ஏந்தி நிற்பதைக் காணலாம். கருவறையில் மூலவருக்குப் பின்னால். பாம்பறை என்று ஒரு சுரங்க அறை உள்ளது. அங்கே முருகப் பெருமானால் பூஜிக்கப்பட்ட பஞ்சலிங்கங்கள் இருக்கின்றன.

மாங்கல்ய தோஷம் நீங்க

பக்தியால் அமைச்சருக்கு அப்படி ஒரு முடிவு வந்திருக்கக் கூடாதுதான். மக்களின் வரிப் பணம் முழுவதும் அவனுக்காக அவனின் அருளுக்காக ஆலயம் கட்டும் பணியில் செலவழித்தான் அமைச்சன்.

Koviloor Digital Library

மன்னனுக்கு நம்பிக்கையில்லை. வரிப்பணம் வந்து சேரவில்லை. காரணம் கேட்டால் கோயில் கட்டுகிறேன் என்கிறான். அதுவும் என்னைக் கேட்காமல், நான் ஆணையிடாமல்... மன்னன் சினம் கொண்டான்.

அரசன் கோபம் அன்றே கொல்லும் அந்தத் தீர்ப்பு அமைச்சனை தீர்த்துக் கட்டியது. அமைச்சனின் மனைவி அழுதாள். புரண்டாள். கண்ணீர் வற்ற வற்ற அந்தக் கருணைக்கடலை கைகூப்பி மாங்கல்யப் பிச்சை கேட்டாள். உன்னால் தானே... எல்லாம் உன்னால் தானே.... உனக்கு ஆலயம் அமைக்கபோய் அவர் உயிர்கூடு இப்படி வெறுமையாய்க் கிடக்கிறது.

பக்தை அரற்றுகிறாள். பக்தன் மாண்டு கிடக்கிறான். மார்க்கண்டேயனுக்காக காலனுடன் மல்லுக்கு நின்றவனால் அந்த அழுகையைத் தாங்க முடியவில்லை. பிராண வரதேஸ்வர மூர்த்தியின் கருணையால் அமைச்சன் பிராணன் வரப் பெற்று எழுகிறான். மனைவியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

மாங்கல்ய தோஷம் நீங்கி அவள் தீர்க்க சுமங்கலியாய் வாழ அருள்புரிந்த பிராணநாதரின் இருப்பிடம்தான் திருமங்கலக்குடி.

சூரியனார் கோயிலுக்கு அருகில் உள்ள இத்தலம், நவகிரக நாயகர்கள் வழிப்பட்ட தலம். மாங்கல்ய பாக்கியம் அருளிய தலம்.

சூரியனால் கோயிலில் உள்ள நவகிரக மூர்த்திகளை வழிபட்டபின் இங்கு சென்று வழிபடுதல் நலம்.

திருமங்கலக்குடி பிராணநாதரின் அருள் பெற்றே நவநாயர்களும் சூரியனார் கோயிலில் அமரும் பேறு பெற்றனர்.

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகியோரால் பாடல் பெற்ற தலம். வாசலில் அழகான திருக்குளம் - மங்கள தீர்த்தம்.

Koviloor Digital Library

அம்பிகை மங்களநாயகி. சுவாமிக்கு மங்கள நாதர் என்ற பெ நம் உண்டு. மங்கள விநாயகர்.... சர்வம் மங்களம் மயம். ஞா...றுதோறும் உச்சிகால பூஜையின் போது வெள்ளெருக்கு இலையில் வைத்து வழங்கப்படும் தயிர் அன்ன பிரசாதத்தினை சுவாமி சன்னதி எதிரில் நின்று உண்பதால் ரோக நிவர்த்தி அடையப் பெறுவர்.

பிராணநாதரின் அருள்பெற திருமங்கலக்குடி சென்று பிரார்த்திப்போம்.

மஹாவிஷ்ணுவின் 10 அவதாரங்கள்

தசாவதாரம்

1. ஸ்ரீ மத்யஸ்ய அவதாரம்	கேது
2. ஸ்ரீ கூர்மாவதாரம்	சனி
3. ஸ்ரீ வராக அவதாரம்	ராகு
4. ஸ்ரீ நரசிம்மாவதாரம்	செவ்வாய்
5. ஸ்ரீ வாமணாவதாரம்	குரு
6. ஸ்ரீ பரசுராம அவதாரம்	சுக்ரன்
7. ஸ்ரீ ராமாவதாரம்	சூரியன்
8. ஸ்ரீ பலராமாவதாரம்	குளிகன்
9. ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்	சந்திரன்
10 ஸ்ரீ கல்கி அவதாரம்	புதன்

திருமால் சன்னதி உள்ள சிவாலயங்கள்

1. திருவோத்தூர்	-	ஆதிசேவப் பெருமாள்
2. ஆச்சி ஏகம்பம்	-	நிலாத்துண்டப் பெருமாள்
3. கொடிமாடச் செங்குன்றூர்	-	ஆதி கேசவப் பெருமாள்
4. சிதம்பரம்	-	கோவிந்தராஜப் பெருமாள்
5. சிக்கல்	-	கோலவாமனப் பெருமாள்

Koviloor Digital Library

6. திருநணா	–	ஆதிகேசவப் பெருமாள்
7. திருநாவலூர்	–	ஆதிகேசவப் பெருமாள்
8. திருநெல்வேலி	–	நெல்லை கோவிந்தர்
9. திருப்பழணனம்	–	கோவிந்தர்
10. பாண்டிக்கொடுமுடி	–	அரங்கநாதர்
11. திருப்பத்தூர்	–	அரங்கநாதர்
12. திருவக்கரை	–	அரங்கநாதர்

ஆயுதபூஜை ஏன் செய்கிறோம்?

பஞ்ச பாண்டவர்கள் வனவாசம் செய்து முடித்து, துரியோதனனை வென்று, வன்னி மரத்தில் ஒளித்து வைத்திருந்த ஆயுதங்களை, நவராத்திரி விஜய தசமியன்று தான் எடுத்துப் பூஜை செய்தார்களாம். அதனால்தான் பாண்டவர்கள் வெற்றி மேல் வெற்றி பெற்று, நல்வாழ்வு பெற்றார்களாம். அதைத் தொடர்ந்துதான், தற்காலத்திலும் விஜய தசமியன்று ஆயுதபூஜை செய்கிறோம்.

விஜயதசமியன்று, நாம் வன்னிமரத்தைப் பூஜிப்பதால், நாம் பிறவி தோறும் செய்து வந்த தீவினைகள் அகலுமாம். வன்னி என்று நாம் நினைத்தாலும், சொன்னாலும், மரத்தைக் கை கூப்பித்தொழுது வணங்கினாலும், வலம் வந்தாலும் நம் பாபவினைகள் அனைத்துமே அகன்றுவிடும் என்று ஸ்ரீ விநாயக புராணம் கூறுகிறது.

வன்னிமரத்தை நாம் தினமும் அதி காலையில் சுற்றி வந்தால், நம் தீராத நோய்களும் குணமாகி விடுமாம் வன்னி மரக்காற்றும் இலைகளும் நம் மேல் பட்டாலே, பாம்பு, தேள் மற்றும் விஷஜந்துக்களின் விஷத்தைப் போக்கிவிடுமாம்.

தீபாவளியில்

தீபாவளி என்று சொல்லும் பொழுது அனைவரும் பட்டாசு, புது ஆடை ஆகிய இரண்டைத்தான் நினைப்பார்கள். ஆனால் தீப ஒளி = தீபாவளி என்றும் தீபங்களை வரிசையாக வைத்து வழிபடுவதால் தீபாவளி என்றும் மருவி வந்தது.

Kovilloor Digital Library

நரகாசுரன் வேண்டியும் கிருஷ்ணர் வரம் தந்ததும் அனைவருக்கும் தெரியும் நல்ல நாள் என்பதே குடும்பத்தில் உள்ளவர்களும் உறவினர்களும் கூடி பிரார்த்தனை செய்யத்தான். கூட்டுப்பிரார்த்தனைக்கு பலன்கள் அதிகம். இதைத் தெரிந்து தான் முன்னோர்கள் இவ்விதமான அனைத்தையும் அமைத்துக் கொடுத்தனர். பண்டிகை, விரதங்கள் போன்றவை அமைதியாகவும் ஆனந்தமாகவும் கொண்டாட வேண்டியவைகளாகும். வெடி வெடிப்பது தற்போது அதிகமாகி வந்தாலும் இவை கட்டாயம் தவிர்க்க வேண்டியதாகும்.

வைகாசி விசாகம்

வைகாசி மாசத்தில் பௌர்ணமியும், விசாக நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாளை வைகாசி விசாகம் என்பர்.

முருகன் இத்திருநாளில் அவதரித்தார் என்பர்.

முருகன் கோயிலில் சிறப்பு வழிபாடு நடத்துவது வழக்கம். சில ஊர்களில் உற்சவர் வீதி உலா வருவதும் உண்டு.

வைணவ ஆன்மீகப் பெரியார்களில், ஆழ்வார் பெருமக்களில், நம்மாழ்வார் தனிச்சிறப்பு வாய்ந்தவர். அவர் அருளிச் செய்த பாசுரங்கள் பல. அப்பெருமான் அவதரித்த நாளும் இந்நாலில்தான்.

புத்தர் பெருமானும் இதே வைகாசி விசாகத்தில் தோன்றினார் என்றும் சொல்வர்.

ஆனந்தக் கூத்து

ஆனந்த நடனமிடும் நடராசப் பெருமானின் ஒரு கையில் உள்ள உடுக்கை உலகின் தோற்றத்தைக் குறிக்கும். உடுக்கை ஒலிக்கும் போது "ஓம்-ஓம்" என்ற ஒலி எழுகிறது. "ஓம்" என்னும் பிரணவம் உலகத் தோற்றம், எனவே "படைத்தலை" இது குறிக்கும்.

Koviloor Digital Library

அபயக்கரம் காட்டும் கை காத்தலைக் குறிக்கும். பெருமானின் அங்கி, தீச்சுடர் ஏந்திய திருக்கரம், சங்காரம் அழித்தலையும், முயலகன் மேல் ஊன்றிய திருவடி மறைத் தலையும், தூக்கிய திருவடி அனுக்கிரகம் புரிவதையும் அருள் வழங்குதலையும், அருளாலையும் குறிக்கும். இவ்வாறாக ஆனந்த நடனத் தோற்றம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் இறைவனது ஐந்தொழிலுக்கும் அடையாளமானது.

மனித உறவுகள் மேம்பட........

1. தானே பெரியவன், தானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.

2. அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும், பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.

3. எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காகக் கையாளுங்கள் (Diplomacy)

4. விட்டுக்கொடுங்கள் (Compromise)

5. சில நேரங்களில் சில சில சங்கடங்களை சகித்துதான் ஆகவேண்டும் என்று உணருங்கள் (Tolerance)

6. நீங்கள் சொன்னதே சரி செய்ததே சரி என்ற கடைசி வரை வாதாடாதீர்கள் (Adamant Argument)

7. குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் (Narrow Mindedness)

8. உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும், விடுங்கள் (Carrying Tales)

Koviloor Digital Library

9. மற்றவர்களைவிட உங்களை எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)

10. அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய், ஆசைப்படாதீர்கள் (Over Expectation)

11. எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.

12. கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பிவிடாதீர்கள்.

13. அற்ப விஷயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்.

14. உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக்கொள்ளுங்கள் (Flexibility)

15. மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் (Misunderstanding)

16. மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy)

17. புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல நடந்து கொள்ளாதீர்கள்.

18. பேச்சிலும், நடத்தையிலும் திமிர்த்தனத்தையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பாட்டையும் காட்டுங்கள்.

19. அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து அளவளாவுங்கள் (Frankness)

Koviloor Digital Library

20. பிணக்கு ஏற்படும்போது, அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவங்க முன்வாருங்கள் (Initiative)

21. தேவையான இடங்களில் நன்றியையும், பாராட்டையும் சொல்ல மறக்காதீர்கள். பாராட்டுக்கு மயங்காத மனிதனே இல்லை. அதுவே உங்களுக்கு வெற்றியாக அமையும்.

நன்றி,

திருமதி.விஜயகுமாரி ஸ்ரீதரன்
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
விஜயா மருத்துவமனை விரிவாக்க கிளை
சென்னை - 600 026.

பால் மொழிகள்

1. பால் லக்ஷ்மிக்குச் சமமானதால் கீழே சொட்டிய பாலை துணியால் துடைத்து கையால் அலம்ப வேண்டும் (துடைப்பம் உபயோகப் படுத்தலாகாது).

2. பால் காய்ச்சிய பாத்திரம் காலியான பின் காயவிடாமல் சிறிது நீர் ஊற்றி வைக்க வேண்டும்.

3. எரியும் தீபச்சுடர் / விளக்கு இவற்றைக் குளிரச் செய்ய சிறிது பாலை விளக்கின் நுனியில் வைத்துக் குளிரச் செய்தால் தீப லக்ஷ்மி மகிழுவாள் என்பது குறிப்பிடத்தக்கது.

4. சூடான பாலை (கொதிநிலை பால்) ஸ்வாமிக்கு நைவேத்தியம் செய்யக்கூடாது.

5. நேவத்தியம் வைக்கும் பாலில் ஒரு துளி சர்க்கரை ஏலத்துடன் பொடி செய்து நைவேத்தியம் செய்தால், தினமும் அம்மனுக்குப் பாயசம் செய்து தந்த பலன் என்று கூறுவர் பெரியோர்.

Koviloor Digital Library

6. பொழுது சாய்ந்த வேளையில் தயிரோ / பாலோ கடன் கொடுத்தால் மஹாலட்சுமி நம்மை விட்டு நீங்கி விடுவாள். வீட்டில் விளக்கு ஏற்றும் முன் கொடுக்க நேர்ந்தால் தயிர் ஆனால் சிறிது உப்பும், பால் என்றால் சிறிது சர்க்கரையும் போட்டுத் தர வேண்டும் என்பது வழக்கம்.

7. சூடான பாலில் உரை விடக்கூடாது. விஞ்ஞான ரீதியாகவும், சாஸ்திர ரீதியாகவும் தவறு.

8. சூடான சாதத்தில் தயிர், பால் போட்டு சாப்பிடுவது அறவே தவிர்க்கப்பட வேண்டும்.

9. மோர், தயிர் புளித்து விட்ட காரணத்தினால் சிலர் தட்டில் பரிமாறும் முன் இரண்டையும் சற்றுக் கலந்து போடுவர். இதுவும் தவிர்க்கப்பட வேண்டும்.

ஞான உபதேசம்

1. அர்த்தமில்லாத ஆயிரம் வார்த்தைகளைவிட அர்த்தமுள்ள ஒரு வார்த்தை மேலானது.

2. ஆயிரம் வீரர்களை வெட்டி விழ்த்தியவனைவிடஐம்புலன்களையும் வெட்டி வீழ்த்தியவனே மாவீரன்.

3. மற்றவர்களை அடக்கி ஆள்வதை விட தன்னைத்தானே அடக்கி ஆள்வது மேலானது.

4. ஆயிரம் அஸ்வமேத யாகம் செய்வதை விட ஒருமகானின் ஒரு நிமிட பிரார்த்தனை மேலானது.

5. பாவத்தைப் போக்க பல ஆண்டுகள் தவம் இருப்பதைவிட ஒரு மகானின் புனிதமான கைபடுதல் மேலானது.

6. நாஸ்திகராக மன அடக்கம் இல்லாது 100 ஆண்டு வாழ்வதைவிட கடவுள் தியானத்துடன் ஒருநாள் வாழ்க்கை மேலானது.

Koviloor Digital Library

7. சோம்பேறியின் 100 ஆண்டு வாழ்வை விட முயற்சி உடையவனின் ஒரு நாள் வாழ்க்கை மேலானது.

8. தர்மம் செய்யாமல் 100 ஆண்டுகள் வாழ்வதை விட தர்மத்தை அறிந்த ஒரு நாள் வாழ்க்கை மேலானது.

விழலுக்கு நீரா

1. தீயவனுக்கு நூறு நன்மைகள் செய்தாலும் வீண்.
2. நன்றி இல்லாதவனுக்கு நூறு நன்மைகள் செய்தாலும் வீண்.
3. பண்பற்ற கயவனிடம் பண்புடன் பழகுவதும் வீண்.
4. சொன்ன சொற்படி நடக்காதவனுக்கு நூறு யோசனைகள சொன்னாலும் வீண்.
5. புத்தி கெட்டவனுக்கு நூறு முறை உபதேசங்கள் செய்தாலும் வீண்.

ஆத்மஞான முக்கிய தர்மங்கள்

ஆத்ம ஞானமடைவதற்கு அனுசரிக்க வேண்டிய முக்கிய தருமங்களை தெரிந்து கொள்வோம். சத்தியம், அன்பு, ஜீவகாருண்யம், தன்னலமற்ற சேவை, சாந்தம் போன்ற 5 உயர் பண்புகளை வளர்த்து மேல்நிலைக்கு பக்தன் உயர வேண்டும்.

1. சத்தியத்தால் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பஞ்சபூதங்கள், ஜீவராசிகள் போன்றவைகள் தம்முடைய காரியங்களைச் செய்கின்றன. ஒரு மனிதன் சத்தியத்தில் நிலைத்து இருந்தால் உயர்வு அடையலாம். தன்னுடைய எண்ணங்களும், வார்த்தைகளும் செய்யும் காரியங்களும், சத்தியத்திற்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும். பரிசுத்தமான வைராக்கியத்துடன் ஓம் என்ற மந்திர ஜெபத்தின் மூலம் ஞானம் அடைய வேண்டும்.

Koviloor Digital Library

2. உலகத்தில் எல்லா ஜீவராசிகளும் அன்பை ஆதாரமாகக் கொண்டு வாழ்கிறது. அன்பினால் ஆனந்தமும், தைரியமும், மனச்சாந்தியும் ஏற்படுகிறது. மனிதன் தன்னுடைய அன்பினால் எல்லா ஜீவராசிகளையும் சரிசமமாக பாவித்து ஜாதி, மத பேதங்கள், உயர்வு தாழ்வுகள் இல்லாமல் எல்லாமே பரம் பொருள் என்ற நோக்கத்துடன் எப்பொழுதும் ஓம் என்ற மந்திர ஜெபம் செய்து ஞானநிலை பெற வேண்டும்.

3. உலகத்தில் உள்ள பஞ்சபூதங்களும், ஜீவராசிகளும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக இருப்பதினால் உயர்வு தாழ்வு என்ற பேதங்களை அழித்து சமநோக்குடனும், அன்புடனும் உதவி புரிவதும் சேவை செய்வதுமாக இருந்தால் சந்தோஷமும், மனச்சுத்தியும் உண்டாகும். மனிதன் உயிர்வதை செய்யாது ஜீவகாருண்யத்தை ஆதரித்து நல்லொழுக்கப் பாதையில் இருந்து விலகாமல் தன்னுடைய மனதை எப்பொழுதும் பரம்பொருளையே நினைக்கும்படி செய்து ஓம் என்ற பிரணவ மந்திரத்தை விடாமல் ஜெபித்து ஞானம் அடைய வேண்டும்.

4. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பஞ்சபூதங்கள், ஜீவராசிகள் எல்லாம் தியாகங்களைச் செய்து இந்த உலகம் என்றும் நிலைத்து இருக்க காரணமாக இருக்கிறது. மனிதன் சுயநலமில்லாத சேவை செய்வதினால் அவனுடைய அகங்காரம், கர்வம் போன்றவைகள் அழிந்து சாந்தமான மனநிலை ஏற்படும். தன்னலமில்லாத சேவை செய்து எல்லா ஜீவராசிகள் மீதும் அன்பு காட்டி மனம் தளராமல் தொடர்ந்து ஓம் என்ற மந்திர ஜெபம் செய்து ஞானம் அடைய வேண்டும்.

5. பக்குவமான மனிதன் சாந்த குணத்துடன் இருப்பான். சாந்த குணத்தால் கருணை, ஆனந்தம், மனசுத்தி போன்றவை உண்டாகிறது. மனிதன் தன்னுடைய சாந்த குணத்தால், தீய குணங்களை அகற்றி நற்குணங்களை வளர்த்து இடைவிடாது ஓம் என்ற மந்திர ஜெபத்தால் ஞானம் அடைய வேண்டும்.

Koviloor Digital Library

2002 வருட ராசி பலன்கள்

மேஷம்

மேஷராசி சிங்கங்களே! உங்களை சிங்கம் என்று புகழ்வதால் எதிலும் வெற்றிக் கொடி நாட்டுவீர்கள் என்று எண்ணாதீர்கள். இந்தகாலத்தில் காட்டுராஜாவான சிங்கங்களுக்கும் தொல்லைகள் அதிகம். அதுபோலத்தான் உங்களுக்கும். ஆகவே சிறிது சினத்தைக் கட்டுப்படுத்துங்கள். உங்கள் ஆழ்மனத்தில் இருக்கும் நல்ல எண்ணங்களை பச்சாதாபங்களை எதிராளிக்கு வெளிபடுத்த தயங்காதீர்கள் பிறகு பாருங்கள் உங்கள் வெற்றியை.

போதும் அறிவுரை. 2002 எப்படி விஷயத்துக்கு வாருங்கள் என்கிறீர்களா? எதிலும் பொறுமை வேண்டும் மேஷ ராசிக்காரரே. ஏழரைச்சனி படுத்திய பாடிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடப் போகிறீர்கள். இரண்டில் இனி வரப்போகிறவர் இராகு பகவான். ராகுக்கு ரிஷபம் உகந்த இடம். எனவே உங்களுக்கு பணவரவைப் பற்றி இனிக் கவலையில்லை. வருட மத்தியில் குரு பகவான் 4க்கு பெயர்ந்தவுடன் ராசிநாதனின் தசா புத்தி நடப்பவர்களுக்கு நிச்சயம் புதிய வீடு, பூமி, வாகன யோகம் சித்திக்கும். முக்கியமாக டென்ஷன் குறையப்போகிறது போதுமா. மற்றபடி வேலைப்பளுவைப் பற்றி கவலைப்படாத ஆள் அல்லவா நீங்கள். உங்கள் மனதுக்குப் பிடித்த விதத்தில் பிஸியாக இருப்பீர்கள். கேளிக்கை, சுற்றுலா, விருந்து வைபவங்களுக்கு குறைச்சலில்லை. **So Best of Luck!**

ரிஷபம்

ரிஷபராசிக் காளையே! போஜனப் பிரியரே சுகவாசியே. உம்மை ஜென்மச் சனி ஒன்றும் செய்யாதய்யா! என்ன இது அண்டப் புளுகாக இருக்கிறது நான் 2001 முழுவதும் நாயாக திரிந்தேனே என்னைப் போய் சுகவாசி என்கிறீர்களே எனக் கேட்டால், என் பதில் உங்கள் திசா நாதனே இல்லை புத்தி நாதனே பாடாய் படுத்துகிறார்கள் அதுவும் ஜென்ம குருவின் கைங்கர்யத்தால் o.k.

Koviloor Digital Library

வருவோம் இனி 2002க்கு. 2002 எப்படி என்று கேட்டால் பரவாயில்லை என்றுதான் என்னால் கூறமுடியும். அதுகூட உரத்தத் தொனியில் அல்ல. புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். ஆகவே அடக்கி வாசியும் ஐயா. ஆனால் 2003ல் ராஜா யார் என்றால் கன்னி ராசிக்காரருக்கு அடுத்து நீங்கள்தான். ஏனென்றால் 2002 மத்தியில் குரு 3ம் இடம் பிரவேசம். ரிஷபத்துக்கு பாபியான அவர் 3ம் இடம் செல்வது நல்லதுதான். நல்லது நடக்கவில்லை என்றாலும் கெடுதல் நடக்காது. ஜென்ம ராகு வேறு வரப்போகிறார் பிப்ரவரியில் ஏற்கனவே ஜன்ம சனி வேறு! என்ன பயமுறுத்துகிறேனா! **Dont worry. You are a shrewed guy you are. Able to divert the guns on others head. So do it in your own style. wait until 2003 to achieve your goals.**

மிதுனம்

சாமார்த்தியர்த்திற்கு பெயர்போன **மிதுனராசிக்காரரே!** ஏழரைச் சனியின் ஆரம்பத்திலிருக்கிறீர்கள். புதன் ஆதிக்கம் பெற்ற உங்களை சனீஸ்வரன் என்ன செய்து விடப் போகிறார். இருப்பினும் ஆறுமாதம் ஜென்மகுருவின் பாதிப்பு இருக்கும் அதை சமாளிப்பீர். 2002ன் மத்தியில் குரு வாக்கு, தன ஸ்தானத்திற்கு பெயர்கிறார் நல்லதுதான். ஆனால் உம்மை கிடுக்குப்பிடி போட ராகு விரயஸ்தானத்துக்கு வருகிறாரே. கொடுத்துப் பிடுங்கப் போகிறார் ஜாக்கிரதை. மாதக் கோள்கள் உமக்கு நன்மை செய்வார்கள். ஸ்பெகுலேஷனில் உங்கள் சம்பாத்யம் வீணாகக்கூடிய சாத்தியக்கூறுகளும் உள்ளன. வருடத்தின் இரண்டாம் பகுதியில் பணவிஷயங்கள் ஜரூராக நடக்கும். புதிய வியாபாரங்கள் தொடங்குதல், ஒப்பந்தங்கள் கையெழுத்திடுதல் போன்ற பல காரியங்கள் நிறைவேற்றலும் உங்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் மட்டுமே எதிர்பார்க்கலாம்.

துணிச்சல்மிக்க ஜாதகர்களான இவர்கள் 2002ல் கொஞ்சம் துணிச்சல்களைக் குறைத்துக் கொள்வது நல்லது. பொதுவா இந்த ராசிக்காரர்களுக்கு அட்வைஸ் பிடிக்காது. ஆனால் தான் மாத்திரம் மற்றவர்களுக்கு அட்வைஸ் செய்யவேண்டும் அதை எதிராளி கேட்டு

Koviloor Digital Library
நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். இந்த வருடத்தில் யாரும் உங்கள் பேச்சை கேட்க மாட்டார்கள் ஆகவே அரசியல்வாதிகளே, அதிகார வர்க்கமே நீர் மிதுனக்காரரா Then don't impose others and don't expect they will dance to your tunes till 2003 June.

கடகம்

கவர்ச்சிமிகு கடகத்தாரே! 2001ல் சம்பாதித்தது எவ்வளவு? சோர்த்து வைத்தது எவ்வளவு? செலவு வருகிறது ஜாக்ரதை. செலவு என்றால் பெற்ற பிள்ளை கல்யாணம், மாடி கட்டுதல் மற்றும் மாமனாராக சீமந்தச் செலவு செய்தல் போன்றவைகளும் அடக்கம். நண்பர்களுக்கு உம்மைப் போல் செலவு செய்பவர்கள் யாராவது இருப்பார்களா என்றால் சந்தேகம். இருப்பினும் சந்திரன் ஆதிக்கம் பெற்ற நீர் சந்திரனைப் போலவே 15 நாட்கள் தெம்பாக வளர்ந்தும், 15 நாட்கள் தேய்பிறையாக தேய்ந்தும் காணப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. நண்பர்கள், சுற்றத்தார் அனைவரும் உமக்கு எப்பொழுதும் உதவுவார்கள் ஐயா, சரிதானே, நான் சொல்வது? o.k. நடப்புக்காலத்தில் பல நன்மைகளை பணவிஷயம் உட்பட அனுபவித்தீர்களா இல்லையா. அது 2002லும் தொடரும் பயப்பட வேண்டாம். இலாப சனிதான் உங்களுக்கு ஏதாவது ஒரு வழியில் பணத்தைக் கொடுத்து கொண்டேயிருக்கிறாரே இது 2002லும் தொடரப் போகிறது கவலைப்படாதீர்கள். நண்பர்களை மட்டும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளப்பாருங்கள் கூடவே செலவினங்களையும் கட்டுப்படுத்துங்கள் உங்கள் வாழ்க்கை உயருகிறதா இல்லையா பாருங்கள். வெற்றி நிச்சயம்!.

சிம்மம்

யாருக்கும் அஞ்சாத **சிம்ம ராசிக்காரர்களே!** உங்களுக்கு என்ன குறைச்சல். பட்ட கஷ்டமெல்லாம் பறந்தோடிக் கொண்டிருக்கிறது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் நல்ல செய்திகள் வந்தபடி இருக்கின்றன. உண்மைதானே? 2001ல் முதல் பாதியில் இலாபத்தில் இருக்கும் குரு பகவான் அடுத்த பாதியில் விரயத்தில் நின்றாலும் உச்சகுருவாக நிற்கப் போகிறார்.

Koviloor Digital Library
எனவே செலவும் வைக்க மாட்டார் தீமையும் செய்யமாட்டார் பயப்படாதீர்கள். ஜீவனஸ்தானத்தில் சனி பகவான் வியாபார விஷயமாக என்னென்ன தேக்கங்கள் இருந்தனவோ அத்தனையும் ஒவ்வொன்றாக நீங்கி வெற்றி நடை போட ஆரம்பித்திருக்குமே இப்பொழுதே? உண்மை இல்லையா? சிம்மராசியாரே நீங்கள் ராசியில் சிங்கமாக இருக்கலாம். எதற்காக விரோதிகளை வளர்த்துக் கொள்கிறீர்கள். அனைவரையும் அரவணைத்து செல்லுங்கள். பிறகு பாருங்கள் உங்கள் வெற்றியை 2002ன் இரண்டாம் பாதியில் சில சங்கடங்கள் காத்திருக்கின்றன. இதுநாள் வரை 11ல் இருந்த ராகுவும் 10ல் சனியோடு சேரப்போகிறார். ஜனன ஜாதகத்தில் ராகு. கேது அமைப்பு நன்கு அமையப் பெற்ற ஜாதகருக்கு **This is an additional advantage.** ஆகவே ஜமாயுங்கள் ராஜாவே.

கன்னி

கண்களில் கவர்ச்சியும் காந்தப் புன்னகையும் வீசி எதிரிகளே இல்லாமல் வாழும் **கன்னி ராசி அன்பர்களே!** அப்படி கண்களில் கவர்ச்சி இல்லாத அன்பர்களுக்கு ஓர் புத்திசாலித்தனமாக ஆழ்ந்த பார்வையிருக்கும் உண்மையா? இதுவரை கவனிக்கவில்லை. கண்ணாடியில் தான் பார்க்க வேண்டும் என்கிறீர்களா! நீங்கள் ஹஸ்த நட்சத்திரமாய் இருந்து புதன் ராசியிலே அமையப் பெற்றிருந்தால் 100% நான் சொன்னது உண்மை. உங்களின் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கு 12 ராசியில் யாருக்குமே கிடைக்காத ஒரு வரப்பிரசாதம். சரி 2002 எப்படி? **Super Sir! Don't Worry. In my assessment you are going to enjoy a nice time in 2002 and 2003 also.** பண விஷயத்தில் ஆகட்டும் காரியங்கள் நிறைவேறும் வேகத்திலாகட்டும் எந்த தடையுமிராது. **Smooth Sailing** என்பார்களே அதுபோல ஒரு **Smooth Happennings are going to happen** உங்கள் நல்ல மனதுக்கு அடிக்கடி சஞ்சலம் வருகிறது என்றால் அது நீங்களாக நினைத்துக் கொள்வதுதானே தவிர கடவுள் உங்களுக்கு கொடுக்கும் கஷ்டங்களால் அல்ல நண்பரே! புரிந்ததா. ஆகவே இதுவரை நீங்கள் நடந்து வந்த பாதையை விட்டு மாறாதீர்கள். பத்தில் இருந்த ராகு பாக்யஸ்தானத்துக்கு மாறப்போகிறார். 4ல் இருக்கும் கேது 3க்கு வந்து சகோதர வழியில் பிணக்கை ஏற்படுத்துவார். சமாளிக்க உங்களுக்கா தெரியாது. **All the Best.**

Koviloor Digital Library

துலாம்

அலங்கார பிரியரான துலா ராசி அன்பர்களே, Sometimes Serious, Sometimes Jolly, Quite often Mood out என்று இந்த வருடத்தைக் கழித்திருப்பீர்கள். இனி இல்லை கவலை. எழுந்திருங்கள் வெற்றிநடை போட எப்பொழுதும் அமாவாசைச் சோறே வேண்டும் என்றால் பழையச் சோற்றை சாப்பிடுவது எப்போது? இனிப்பும் கசப்பும் கலந்தது தானே வாழ்க்கை. இனிப்பை மட்டுமே விரும்பும் ஆளாக இருக்கிறீரே நீர். நியாயமா? இந்தக் கதை எல்லாம் வேண்டாம் சொல்லுங்கள் 2002ஐ பற்றி என்கிறீர்களா. O.K. உங்கள் ராசியதிபதியான சுக்கிரன் நன்கு சஞ்சரிக்கும் காலங்களில் ஜாலியாக இருப்பதும் அவனுடைய பாப சஞ்சார சாலங்களில் சஞ்சலத்துக்குள்ளாவதும் தான் உங்கள் விதி. அஷ்டமத்து சனி ஒன்றும் படுத்தாது. பயம் வேண்டாம். ஓடிப்போனவனுக்கு ஒன்பதில் குரு என்பர் பழமைவாதிகள். அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி என்பதும் அவர்கள் வாதம்தான். பயம் வேண்டாம் நண்பரே! 2002 ஜீன் வாக்கில் உச்ச குரு 10ல் வருகிறார். குரு பார்வை மறைகிறதே என்ற கவலைதேவை இல்லை. ஏனென்றால் குருபகவான் உங்கள் ராசிக்கு பாபி. அவர் உச்சமாவது உங்களுக்கு நல்லது மட்டுமல்ல மறைவதும் நல்லது. 3ல் இருந்த கேதுவும் 9ல் இருந்த ராகுவும் முறையே தன மற்றும் அஷ்டம ஸ்தானத்தில் வந்தமரப்போகிறார்கள். நல்லதே நடக்கும்.

விருச்சிகம்

திறமைசாலியான விருச்சிகராசி நேயர்களே! 12 ராசிகளில் உங்கள் ஒருவரைத்தான் திறமைசாலி என்று கூற முடியும். ரிஷபம். கன்னி. மகரம் முதலமானர் கூட சாமர்த்தியசாலி என்றழைக்கலாம். ஆனால் திறமைசாலி என்று உங்களைத்தவிர மற்ற யாரையும் அழைக்கமுடியாது. அது என்ன சாமாத்தியத்திற்கும். திறமைக்கும் வித்தியாசம் என்று குழம்புகிறீர்களா? நீங்கள். குழம்ப மாட்டீர்கள் சார் அடுத்தவரை குழப்புவதில் மன்னரான நீங்களா குழம்புவீர்கள். No Chance. போதும் சார் Come to the Point என்கிறீர்களா. 7ல் சனி.

Koviloor Digital Library

அஷ்டமத்து குரு. ராகு எல்லோரும் படுத்திய பாடு போதும் என்கிறீர்கள் அல்லவா. பயப்படாதீர்கள் குரு 9ம் வீடு அதாவது பாக்கியஸ்தானத்துக்கு போகவிருக்கிறார். ராகுவும் கேதுவும் முறையே 7, ஜென்மராசிக்கு வரவிருக்கிறார்கள் 2002ல்.

இருப்பினும் சனி உங்களை ஒரு கை பார்க்க 8க்கு சென்றால் என்ன செய்வது? பயப்படவேண்டாம் ஏதோ நிலபுலன்களில் சிறு சிறு சிக்கல்கள் ஏற்பட்டு தீரலாம். சகோதர சகோதரி வழியில் செலவு ஏற்படலாம். சமாளிக்க கூடிய திறமையை அங்காரகனும், 5ம் பார்வையாக உச்சகுருவும் வழங்க இருக்கிறார்கள். கவலையை மறந்து ஜமாயுங்கள் தலைவரே. ஜன்மராசியில் கேது அமர்ந்து நல்ல ஆற்றலையும், எதையும் ஏற்கக்கூடிய மனப்பக்குவத்தையும் தர இருக்கும் போது உங்களுக்குகென்ன குறைச்சல்.

துனுசு

குருவருள் பெற்ற தனுர் ராசி அன்பர்களே! என்ன தான் நீங்கள் குருவின் குழந்தையாக இருந்தாலும் மற்றொரு குழந்தையான மீன ராசி அன்பர்களுக்கு வாரி வழங்குவதைப் போல குருபகவான் உங்களுக்கு வழங்குவதில் ஏனோ கரிசனம் காட்டுகிறார். வருத்தப்படாதீர்கள். இப்பொழுதுதான் 7ம் பார்வையாக உங்களுக்கு ஆசி வழங்கி 2002 ஜீன் முடிய துணை நிற்கிறாரே! இருந்து என்ன புண்ணியம் என்று சலித்துக் கொள்கிறீர்களா. புரிகிறது. இப்போது குரு அமர்ந்திருக்கும் புதனின் வீடான மிதுனம் கேந்திராதிபத்ய தோஷம் சார், புதன் திசையோ, புத்தியோ நடப்பவர்களுக்கு சிறிது சோதனைதான். 8ம் வீட்டை அடையப் போகும் குரு இன்னும் தொல்லை கொடுத்தால் என்ன செய்வது? No Sir, Not Possible. தான் பெற்ற பிள்ளைகளையே யாராவது சோதிப்பார்களா! அதனால் உங்கள் ராசிக் கிரகமான குருபகவான் உங்களை ஒன்றும் செய்யமாட்டார். ஆனால் அருமையான இடமான 6ம் வீட்டு சனி 7க்கு வந்தால் ஏதாவது செய்வாரா? செய்வார். சமாளியுங்கள் சாமர்த்தியம் இருக்கிறது. 8ல் அமரப்போகும் குரு உச்சமாகப் போகிறார். நல்லதே செய்வவார். மாதக் கோள்களும் திருவருளும், கடவுள் பக்தியும் உங்களுக்கு நன்மை செய்ய காத்திருக்கின்றன சார் வென்று வாருங்கள்.

Koviloor Digital Library

மகரம்

வேகத்தை வெளியே காட்டாத மகரராசி நேயர்களே. நீங்கள் ஏதோ ஜாலியாக சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்று உங்கள் எதிராளி நினைக்கிறான். நீங்கள் ஜாலியோடு ஜோளியும் பார்க்கும் ஆள் என்பது உங்களை நன்கு புரிந்தவர்களுக்கே தெரியும் உண்மைதானே! உண்மை என்றால் எனக்கு ஒரு Thanks சொல்லுங்கள் சார். அது என்ன திடீரென்று பளிச்சென்று இருக்கிறீர்கள். சமயத்தில் தாடியோடு சோம்பல் சோக கீதம். உங்கள் ராசிநாதன் அப்படியப்பா. அதற்கு நாம் என்ன செய்ய முடியும். 2002க்கு வருவோமா. O.K. உமக்கு என்ன சார் குறைச்சல் பூர்வ புண்ணியஸ்தானத்துக்கு சனி பகவான் அவரும் ரோகஸ்தானத்துக்கு பெயரவிருக்கிறார். பிப்ரவரி முடியும் போது 5ல் ராகுவும் லாபத்தில் கேதுவும். ஜீலை முதல் கடகத்தில் உச்ச குரு உம்மை நோக்க விருக்கிறார். ஹலோ சார் ஏதோ ஒரு பெரிய பிளான் பல நாட்களாக உங்கள் மனதில் உள்ள கனவு நினைவாகப் போகிறது சார். நவம்பர் டிசம்பரிலே நீங்கள் ஒரு குட்டி ராஜா தான். காரில் பவனி வரப் போகிறீர்கள் செந்தக் காரோ. ஓசிக் காரோ எனக்குத் தெரியாது. கார் பவனி சுகம்தானே. 7ம் வீட்டு குரு கொஞ்சம் ஜாலி வழியை வேறு காட்டப் போகிறார். கேது பகவான் பணம் கொடுக்கிறார். ஜேரோ! ஜோர்! Enjoy!.

கும்பம்

பந்தாவுக்கு குறைச்சலில்லாத கும்பராசி அன்பரே! 2001ல் வீட்டை வாங்கினீர்களா அல்லது புதுப்பித்தீர்களா. நான் சொல்லவில்லை உங்கள் ஜாதகம் சொல்கிறது சார். 5ம் இல்லத்துக்கு குரு உங்களுக்கு நல்ல அறிவாற்றலையும் பணம் சேமிக்கும் வழியையும் 2001ல் காட்டியிருப்பாரே! போதாதற்கு 4ம் இல்ல சனி பகவான் அசையாச் சொத்தில் பணத்தைப் போட அருளாசி வழங்கியிருபார். சான்ஸை மிஸ் பண்ணியிருந்தீர்களென்றால் உங்கள் தசாபுத்தி நன்றாக இல்லை கூடவே உங்கள் புத்தியும் சிறிது தடுமாறியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

Koviloor Digital Library

சரி காலம் தாழ்ந்து விடவில்லை 2002ன் முதல் ஆறுமாத காலத்திற்குள் மேலே சொன்ன வேலைகளை சாமார்த்தியமாக செய்து முடியுங்கள். 6ம் வீட்டுக்கு செல்லவிருக்கும் குரு பகவான் உங்கள் உடம்பை கொஞ்சம் படுத்தலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. 5ம் இல்ல சனி 2002ல் நன்மைதான செய்வார். ராகு கேது பிரச்சனையும் கிடையாது. ஆகவே வண்டியை ஓட்டுங்கள் பக்குவமாக போனீர்கள் என்றால் You will reach the Destination.

மீனம்

மீன ராசி அன்பரே கில்லாடி கிங்கய்யா நீர். வாழ்க்கை என்னும் நீரோட்டத்தில் எப்படி நீந்தி கரை சேருவது என்று மீன் குஞ்சுக்கு சொல்லியா கொடுக்க வேண்டும். ஏற்கனவே தனுசு ராசியில் உங்களைப் பற்றி உயர்வாக சொல்லியிருக்கிறேன் பாருங்கள். குருபகவானின் பூரண அருள் பெற்றிருக்கும் நீங்கள் ஒரு சிறந்த பக்திமான் சார். நல்லவழியில் நடக்க வேண்டும் என்று விரும்பி நடப்பீர்கள் எதிராளியை கோபத்தில் வஜ்ராயுதத்தை பரயோகித்து விட்டு வருத்தப்படுவீர்கள் உண்மையா. உங்கள் ராசியைச் சேர்ந்த பலருக்கு இரட்டை வழியில் வருமானம் இருக்கும். அனைவரையும் வளைத்துப் போடும் சாதூர்யம் உங்களுக்கு கைவந்த கலையாறிற்றே. மூன்றாம் இல்ல சனி 2001ல் நல்லது தான் செய்திருப்பார். 2002ல் மூன்றில் ராகுவும் பாக்கியத்தில் கேதுவும் வந்து நன்மைபுரிய விருக்கிறார்கள். கடகராசிக்கு ஜீலை முதல் வாரத்தில் செல்லவிருக்கும் குரு பகவான் உங்களுக்கு வழங்கப் போகும் சௌகரியங்களைப் பற்றி சந்தேகம் இருந்தால் என்னை வந்து பாருங்கள் தீர்த்து வைக்கிறேன், உங்கள் சந்தேகங்களை. மற்றபடி 9ம் இல்ல கேது உங்கள் மனதுக்கு பிடித்த உறவை கொஞ்சம் படுத்துவார். அது தாயகவோ அல்லது தாரமாகவோ இருக்கலாம். 3ம் இல்ல ராகுவும் சகோதர வழியில் சிறு சஞ்சலங்களை உண்டு பண்ணலாம். நல்லதும் கெட்டதும் கலந்ததுதானே வாழ்க்கை. வெற்றி! கொள்ளுங்கள் 2002ஐ Best of Luck.

தொகுப்பு
ச.ஆனந்தன்
உதவி பொதுச் செயலாளர்
சென்னை புறநகர் மண்டலம்

Koviloor Digital Library

ஆறுமுக சுவாமி விருத்தம்

ஆறுமுகமும் பன்னிரெண்டு கையும் வேலும்
அலங்கார ஆபரணம் அணிந்த மார்பும்
திருமுகமும் வெண்ணீறும் புனைந்த மெய்யும்
ஜெகமெலாம் புகழ்படைத்தாய் சுப்பிரமண்யா
முருகா! சரவணபவனே! கார்த்திகேயா!
முக்கணனார் புத்திரனே! உக்ரவேலா!
இருகரமே உனைப்பணிந்தோம் பழநிவேலா
இது சமயம் அடியாரை ரட்சிப்பாயே.

மயிலேறி விளையாடும் சுப்ரமண்யா!
வடிவேலா! உன்பாதம் நம்பினேனே
உயிரிழந்து அபகீர்த்தியாகும் வேளை
உன்செயலால் இதுசமயம் உயிரைக்காத்தாய்
தயவாக இனிமேலும் உயிரைக்காத்துச்
சண்முகனே அடியார்தம் துயரம் தீர்ப்பாய்
வைபோக மானமலை பழனிவேலா!
வர மளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே

வருந்துமடியார் உயிரைக்காக்கும் தெய்வம்
வையகத்தில் வேறொருவரில்லை யென்று
அறிந்து நான் உனைப்பணிந்தேன் சுப்ரமண்யா
ஆதரித்துப் பிராணபயம் தீருமையா
திரிந்தலைந்து அறுமூன்று திங்களாகச்
சிறையிருந்து தளைபூண்டு சின்னமானேன்
பறந்துவரு மயிலேறும் பழநிவேலா!
பண்பாக உயிர்காத்து ரட்சிப்பாயே.

பெருவேங்கைப் புலி பிடித்த பசுவைப் போலப்
பிதுர்கலங்கி மனம்தளர்ந்து புலம்பினோமே
இருவருமே உனைக்கூவச் செவிகேளாதோ
இதுசமயம் தாமதமா யிருக்கலாமோ?

Koviloor Digital Library

குருவாகித் தந்தைதாய் நீயேயாகில்
குமரேசா! பிராணபயந் தீருமையா
முருகசோ! இதுசமயம் பழநிவேலா!
முன்வந்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

பாம்பின்வாய் சிக்கியதோர் தேரை போல
பதைபதைத்து வாடுகிறோம் பாலர் நாங்கள்
தேம்பியே புலம்புகிறோம் துயரமாகித்
தென்னவனே! உன்செவிக்குக் கேளாதோதான்
நான் புவியில் உனைநம்பி மகிழ்ந்திருந்தேன்
நாயேனுக்கு அபாயம்வர நியாயமோதான்?
சாம்பசிவன் புத்திரனே! பழநிவேலா!
சமயமிது உயிர்காத்து ரட்சிப்பாயே.

வலையில் அகப்பட்ட மான்போல மயங்குகிறோம்
வடிவேலா! இது சமயம் துயரந் தீர்ப்பாய்
கொலைகளவு பாதகங்கள் பொய்கள் எல்லாம்
கொடும்பழிகள் வஞ்சனைகள் பில்லிசூனியமெல்லாம்
தொலையாத சிறுபிணிநோய் வல்வினைகளெல்லாம்
துரத்துமையா மயிலேறும் சுப்ரமண்யா!
மலையிலுறை வாசனே! பழனி வேலா!
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே

நாகமது கெருடனைக் கண்டலைந்தாற் போல
நான்பயந்து அலைதுரும்பாய் அலைகிறேனே
தாகமது தீருமையா தவிக்கும் வேளை
சண்முகனே! இதுசமயம் அடியேனுக்கு
மேகமது பயிர்க்குதவி செய்தாற்போல
வேலவனே! பிராணபயந் தீருமையா
வேகமுடன் வரவேணாம் பழனிவேலா!
வினைதீர்த்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

Koviloor Digital Library

பூனைகையில் சிக்கியதோர் கிளியைப் போலப்
புலம்புகிறோம் பிராணபயம் மிகவுமாகி
நானடிமை உன்னை நம்பியிருக்கும் வேளை
நாயகனே! பாராமுகமாய் இருக்கலாமோ?
மானீன்ற வள்ளியம்மை தெய்வயானை
மணவாளா சரவணனே! கருணை செய்வாய்
கானமயில் வாகனனே! பழநிவேலா!
கடவுளே உயிர்காத்து ரட்சிப்பாயே

தூண்டிலகப்பட்ட மீன் போல் துடிக்கிறேனே
சுப்ரமணியா! இதுசமயம் அடியேனுக்கு
வேண்டும்வரம் கொடுப்பதற்குப் பார்த்து நீயே
வேறொருவ ரில்லையென்று நம்பினேனே
மீண்டுவரும் வினைதீர்த்துத் துயரந்தீர்ப்பாய்
வேலவனே! சூரசங்கார வேலா
ஆண்டவனே! உனைப் பணிந்தேன் பழநிவேலா!
அடியார்கள் உயிர்காத்து ரட்சிப்பாயே.

நஞ்சுபட்டு விஷமேறி மயங்கு மாப்போல்
நடுநடுங்கிக் கிடுகிடுவென்று பயந்து நாங்கள்
தஞ்சமென்றே உனைப்பணிந்தோம் திருத்தணிகை வாசா
சத்குருவே! பிராணபயந் தீருமையா
பஞ்சகனைச் சிறைவிடுத்துத் தலையை வாங்கிப்
பரிகரித்து உன்னிருதாள் பதமேதந்து
வஞ்சனைகள் செய்யாமல் பழநிவேலா!
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

அத்திமுகனே! முக்கண்ணனுக்கு இளையவேலா!
அறுமுகனே! தணிகையிலே அமர்ந்தவாசா!
வித்திறத்திற் போசாத மூடன்நானும்
வேலவனே! நின்னருளாற் கவியைப்போலப்
பத்துமே பதிகமாய்ப் பாடிச் சொன்னேன்
என்மீதில் பிழைகள் மனம் பொறுத்தேயாள்வாய்
சத்தியமாய் உனைப் பணிந்தோம் எங்கள் அய்யா!
சண்முகனே! அடியாரை ரட்சிப்பாயே.

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

Kovoor Digital Library

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே (ஆடுக)

ஆழிப் படுக்கை கொண்டோனின்
அருமை மருகா ஆடுகவே
ஊழி தாண்டி நிற்பாரின்
உத்தமச் செல்வா ஆடுகவே (ஆடுக)

வாழும் மனிதர் யாவருக்கும்
வழிக்குத் துணையாம் வேலவனே
ஆளும் கவலை ஓடிடவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக)

ஆடகப் பொன்னால் ஊஞ்சலிட்டு
அதற்கு வயிரக் கயிறுமிட்டு
கூடிடும் அடியார் ஆடிடவே
குமரா ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக)

பாடுகள் குறைந்தே மாந்தரெலாம்
பண்பாய் வாழ்ந்து உயர்ந்திடவே
வாடிடும் பயிர்கள் வளம் பெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக)

முன்னே பின்னே சென்றாலும்
முளையில் ஒன்றி நின்றிடுமே
என்னே வாழ்க்கை என்றாலும்
எல்லாம் உன்னைச் சுற்றியதே (ஆடுக)

Koviloor Digital Library

குன்றக் குடியாய் எமையாக்கும்
குன்றக் குடியின் வேலவனே
கண்ணே மணியே கதிர்வேலா
கவினார் ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக)

விண்ணவர் செல்வி தெய்வானை
வேடவர் மகளாம் வள்ளியுடன்
மண்ணகம் சுற்றும் மயிலேறி
மேதகு சேவற் கொடியாட (ஆடுக)

கொண்டிடுங் காதல் உணர்வோடு
கனிந்த நெஞ்சத் தூஞ்சலிலே
அன்புடன் ஏறி இனிதமர்ந்தே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக)

மண்ணைப் பிளந்து பெரும் பேட்டில்
மாபெரும் அருளுடை வடிவுடனே
பெண்ணின் நல்லார் இருவருடன்
பெருமயில் எறி வந்தவனே (ஆடுக)

கண்ணே தெரியாக் காட்டிடையே
கலங்கித் தவிக்கும் எங்களுக்கே
உன்னால் வழியும் தெரிந்துயர
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக)

ஆறடி நெடிதாம் உருவுடனே
அடியார் பக்தி உருவேற
பேரருள் கொண்டாய் பெரும் பேடா
பிள்ளைகள் நலிவினைப் போக்கிடவே (ஆடுக)

சீரடி வணங்கிட வந்துள்ளோம்
செல்வா அருளைத் தந்திடுவாய்
ஆரிருள் விலகி ஒளி பெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக)

Koviloor Digital Library

ஸ்ரீ தேவராய சுவாமிகள் அருளிச்செய்த

கந்தர் சஷ்டிக் கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் - கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும்; நிமலர் அருள்
கந்தர் சஷ்டிக் கவசந் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட,
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்

கையில்வே லால் எனைக் காக்கவென்று வுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

Koviloor Digital Library

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரவண பவனார் சடுதியில் வருக
சரவண பவச ரரரர ரரர
சிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா! நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறனெ

வசுர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா! வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன் றீயும். தனியொளி யொவ்வும்
குண்டலி யான்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்.
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

Koviloor Digital Library

முப்புரி நாலும் முத்தணி மார்பும்
செப்பழ குடை ய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளி பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாழும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகனெ
டடிகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேல் முந்து
என்றனை யாளும் ஏரக செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனை காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

Koviloor Digital Library

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழுகுற செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வஜ்ஜிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

Koviloor Digital Library

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறக் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராஷதரும்
அடியனைக் கண்டால் அலறி கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்

கனகபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்

காசும், பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழி போக்கும்
அடியனை கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள்எனைக் கண்டால் கலங்கிட

Koviloor Digital Library

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்

கட்டு கட்டு கதறிட கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்

சூலைசயம் குன்மம் சொக்கச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லா பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

Koviloor Digital Library

உன்னை துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவஒழி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா; கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழனிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்க
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க!
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைகுரு வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குற மகளுடன்!

Koviloor Digital Library

வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்களன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவன் நீகுரு! பொறுப்பது உன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியமளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென்(று) அடியார் தழைத்திட அருள்செய்
கதந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவசம் இதனை
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுரு கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டத்திக் குள்ளோர் அடங்கலுன் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்

மாற்றலல் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில் Noolaham Digital Library
வீரலட்சு மிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனி குன்றினில் இருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்!
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!

திறமிகு திவ்ய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே

மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

-கந்தர் சஷ்டிக் கவசம் முற்றிற்று-

அரோகரா

முந்தி முந்தி கணபதிக்கு	அரோகரா
மூத்த பிள்ளை திருவடிக்கு	அரோகரா
கந்த வேலன் முருகனுக்கு	அரோகரா
கார்த்திகேயன் குமரனுக்கு	அரோகரா
திருப்பரங்கிரி வேலனுக்கு	அரோகரா
திருச்செந்தூர் வீரனுக்கு	அரோகரா

Koviloor Digital Library

அருட்பழனி ஆண்டவர்க்கு	அரோகரா
ஐயன் சாமி நாதனுக்கு	அரோகரா
குன்றிருக்கும் இடமெல்லாம்	அரோகரா
குடியிருக்கும் பாலனுக்கு	அரோகரா
தென்றல் வரும் சோலை மலை	அரோகரா
சேரும் மகராஜனுக்கு	அரோகரா
முப்பழமும் சர்க்கரையும்	அரோகரா
மூங்கிலிலே தாங்கிவந்தோம்	அரோகரா
அப்பன் முகம் காண்பதற்கே	அரோகரா
ஆசைமனம் ஏங்கிவந்தோம்	அரோகரா
காட்டுவழி நாட்டுவழி	அரோகரா
கலகலக்கும் ரோட்டுவழி	அரோகரா
கோட்டுவழி மேட்டுவழி	அரோகரா
குமரா உன்பாட்டு வழி	அரோகரா
கால் வலியின் வீக்கத்திலே	அரோகரா
கண் மயங்கும் ஏக்கத்திலே	அரோகரா
பால் பொங்கும் ஊக்கத்திலே	அரோகரா
பசி தாகம் தூக்கத்திலே	அரோகரா
காவடியும் பால் குடமும்	அரோகரா
கட்டி வைத்த வேளையிலும்	அரோகரா
காவடியில் செல்வதற்கு	அரோகரா
தலை சுமந்த காலையிலும்	அரோகரா
அடியெடுத்து வைக்க வைக்க	அரோகரா
ஆவேசம் தான் பிறக்க	அரோகரா
படியேறிச் செல்ல செல்ல	அரோகரா
பரவசமாய்த் துள்ளத்துள்ள	அரோகரா
சாறெடுத்து அபிஷேகம்	அரோகரா
சந்தனத்தால் அபிஷேகம்	அரோகரா
நீறெடுத்து அபிஷேகம்	அரோகரா
நெய்யாலே அபிஷேகம்	அரோகரா
பாலாலே அபிஷேகம்	அரோகரா
பட்டாடை அலங்காரம்	அரோகரா
ஆரத்தி கற்பூரம்	அரோகரா

Koviloor Digital Library

ஆனந்தம் ஆனந்தம்	அரோகரா
அழகப்பன் சந்நிதியில்	அரோகரா
ஆண்டியப்பன் காலடியில்	அரோகரா
பழநியப்பன் கோவிலிலே	அரோகரா
பழநாபுரி வீதியிலே	அரோகரா
தென் பழனி வாசனுக்கு	அரோகரா
திருவேரகு நாதனுக்கு	அரோகரா
தண்டபாணி வேலவனுக்கு	அரோகரா
சக்தி உமைபாலனுக்கு	அரோகரா

குமாரஸ்தவம்

ஓம் சண்முக	பதயே நாமோ நம
ஓம் ஷண்மத	பதயே நாமோ நம
ஓம் ஷட்கரீவ	பதயே நாமோ நம
ஓம் ஷட்கோஊ	பதயே நாமோ நம
ஓம் ஷட்கோச	பதயே நாமோ நம
ஓம் நவநிதி	பதயே நாமோ நம
ஓம் சுபநிதி	பதபே நாமோ நம
ஓம் நரபதி	பதயே நாமோ நம
ஓம் ஸீரபதி	பதயே நாமோ நம
ஓம் நட்ச்சிவ	பதயே நாமோ நம
ஓம் ஷடரஷர	பதயே நாமோ நம
ஓம் கவிராஜ	பதயே நாமோ நம
ஓம் தபராஜ	பதயே நாமோ நம
ஓம் இஹபர	பதயே நாமோ நம
ஓம் புகழ்முநி	பதயே நாமோ நம
ஓம் ஜெய ஜெய	பதயே நாமோ நம
ஓம் நய நய	பதயே நாமோ நம
ஓம் மஞ்சுள	பதயே நாமோ நம
ஓம் குஞ்சரி	பதயே நாமோ நம
ஓம் வல்லீ	பதயே நாமோ நம
ஓம் மல்ல	பதயே நாமோ நம
ஓம் அஸ்தர	பதயே நாமோ நம
ஓம் சஸ்தர	பதயே நாமோ நம

Koviloor Digital Library

ஓம் ஷஷ்டி பதயே நாமோ நம
ஓம் இஷ்டி பதயே நாமோ நம
ஓம் அபேத பதயே நாமோ நம
ஓம் ஸுபோத பதயே நாமோ நம
ஓம் (வ்) வியூஹ பதயே நாமோ நம
ஓம் மயூர பதயே நாமோ நம
ஓம் பூத பதயே நாமோ நம
ஓம் வேத பதயே நாமோ நம
ஓம் புராண பதயே நாமோ நம
ஓம் (ப்) பிராண பதயே நாமோ நம
ஓம் பக்த பதயே நாமோ நம
ஓம் முக்த பதயே நாமோ நம
ஓம் அகார பதயே நாமோ நம
ஓம் உகார பதயே நாமோ நம
ஓம் விகாச பதயே நாமோ நம
ஓம் ஆதி பதயே நாமோ நம
ஓம் பூதி பதயே நாமோ நம
ஓம் அமரா பதயே நாமோ நம
ஓம் குமரா பதயே நாமோ நம

முருகப் பெருமான் வழிபாடுகள்

108 போற்றிகள்

ஓம் அப்பா போற்றி
ஓம் அரனே போற்றி
ஓம் அழகா போற்றி
ஓம் அருவே போற்றி
ஓம் உருவே போற்றி
ஓம் அபயா போற்றி
ஓம் அதிகா போற்றி
ஓம் ஆறுபடையோய் போற்றி
ஓம் ஆறுமுகத் தரசே போற்றி
ஓம் ஆதி போற்றி
ஓம் அனாதி போற்றி
ஓம் குகனே போற்றி
ஓம் குமரா போற்றி
ஓம் குரவா போற்றி
ஓம் குன்றுதோறும்
நின்றோய் போற்றி
ஓம் சரவணா போற்றி
ஓம் சண்முகா போற்றி
ஓம் சர்வலோகா போற்றி
ஓம் சத்தியசீலா போற்றி
ஓம் சிட்டனே போற்றி
ஓம் சிவக்குமரா போற்றி

Koviloor Digital Library

ஓம் இச்சை போற்றி
ஓம் கிரியை போற்றி
ஓம் இறைவா போற்றி
ஓம் இளையோய் போற்றி
ஓம் ஈசா போற்றி
ஓம் நேசா போற்றி
ஓம் உத்தமா போற்றி
ஓம் உயிரே போற்றி
ஓம் உணர்வே போற்றி
ஓம் உமைபாலா போற்றி
ஓம் எளியோய் போற்றி
ஓம் எண்குணா போற்றி
ஓம் ஏகா போற்றி
ஓம் அனேகா போற்றி
ஓம் ஒளியே போற்றி
ஓம் கூரோளியே போற்றி
ஓம் கந்தா போற்றி
ஓம் கடம்பா போற்றி
ஓம் கருணாமூர்த்தியே போற்றி
ஓம் காவலா போற்றி
ஓம் கார்த்திகேயோ போற்றி
ஓம் பொன்வே போற்றி
ஓம் பொருளே போற்றி
ஓம் புலவா போற்றி
ஓம் பூரணா போற்றி
ஓம் மன்னா போற்றி
ஓம் மயிலோய் போற்றி
ஓம் மறையே போற்றி
ஓம் மணக்கோலா போற்றி
ஓம் மாசிலாய் போற்றி
ஓம் மால்மருகா போற்றி
ஓம் முருகா போற்றி
ஓம் முதல்வா போற்றி
ஓம் முத்தையா போற்றி
ஓம் மூவர்க்கும் மேலாய் போற்றி
ஓம் வரதா போற்றி
ஓம் விரதா போற்றி
ஓம் விவேகா போற்றி
ஓம் வித்தகா போற்றி

ஓம் சிவக்கொழுந்தே போற்றி
ஓம் சித்தி போற்றி
ஓம் முக்தி போற்றி
ஓம் சூரா போற்றி
ஓம் வீரா போற்றி
ஓம் சுப்பிரமண்யா போற்றி
ஓம் செந்தமிழா போற்றி
ஓம் செங்கல்வராயா போற்றி
ஓம் சேவலா போற்றி
ஓம் சேனாபதியே போற்றி
ஓம் ஞானபண்டிதா போற்றி
ஓம் தூயோய் போற்றி
ஓம் துரையோ போற்றி
ஓம் நடுவா போற்றி
ஓம் நல்லாய் போற்றி
ஓம் நாதா போற்றி
ஓம் போதா போற்றி
ஓம் நாவலா போற்றி
ஓம் பாவலா போற்றி
ஓம் நித்தியா போற்றி
ஓம் நிமலா போற்றி
ஓம் குஞ்சரிமணாளா போற்றி
ஓம் பரங்குன்றின் பாலா போற்றி
ஓம் சூரனை மாய்த்தோய் போற்றி
ஓம் செந்தில் செவ்வேலே போற்றி
ஓம் ஆண்டியாய் நின்றோய் போற்றி
ஓம் ஆவினன் குடியோய் போற்றி
ஓம் ஏரகப் பெருமான் போற்றி
ஓம் வள்ளி மணாளா போற்றி
ஓம் வளர்தணி கேசா போற்றி
ஓம் சோலையிற் செல்வா போற்றி
ஓம் ஓம் சுகமெல்லாம் தருவாய் போற்றி
ஓம் உடல்நலம் தருவாய் போற்றி
ஓம் செருக்கினை அருப்பாய் போற்றி
ஓம் சினம்காமம் தவிர்ப்பாய் போற்றி
ஓம் அவாவினை அழிப்பாய் போற்றி
ஓம் அறம்பொருள் தருவாய் போற்றி
ஓம் பிறப்பினை ஒழிப்பாய் போற்றி
ஓம் பெருவாழ்வு அருள்வாய் போற்றி

Koviloor Digital library

ஓம் விசாகா போற்றி
ஓம் விதியே போற்றி
ஓம் கதியே போற்றி
ஓம் விண்ணோர் தொழும் விமலா போற்றி
ஓம் சேவலும் மயிலும் போற்றி
ஓம் அன்னை தெய்வானை போற்றி
ஓம் அருமைத்தாய் வள்ளி போற்றி

ஓம் அனைத்தும் நீயே போற்றி
ஓம் அருள்வாய் தென்பழனி ஆண்டவா போற்றி

திருப்புகழ்

நாதவிந்துக லாதீ நமோ நம
வேதமந்திர சொரூபா நமோ நம
ஞானபண்டித சுவாமி நமோ நம வெகுகோடி

நாமசம்பு குமார நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாகபந்தம யூரா நமோ நம பரசூரர்
சேததண்ட விநோதா நமோ நம
கீதகிண்கிணி பாதா நமோ நம
தீரசம்ப்ரம வீரா நமோ நம கிரிராஜ

தீப மங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்

ஈதலும்பல கோலால பூஜையும்
ஓதலுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையும் மறவாத

ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழமண்டல மீதே மனோகர
ராஜகெம்பீர நாடாளு நாயக வயலூராம்

KOVILOOR AND
A. No. 3492

Koviloor Digital Library

ஆதரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முன்னாளில்
ஆடல்வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதியந்த வுலாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நன்னாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

மங்களம்

ஆதிபரஞ் ஜோதிக்கும் அபிராமிக்கும் ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வானைக்கும் வடிவேலர்க்கும் சுபமங்களம்
திருவுக்கும் திருமாலுக்கும் தேவதேவர்க்கும் ஜெயமங்களம்
குருவுக்கும் குமரேசர்க்கும் குறமாதுக்கும் ஜெயமங்களம்
அரைசூழ்கதிர் காமம்வாழ் முருகையர்க்கும் சுபமங்களம்
செந்தமிழ்கல்வி யாளர்க்கும் புவியாளர்க்கும் ஜெயமங்களம்
கந்தனாறு முகன்வேல் முருகையர்க்கும் சுபமங்களம்

வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்க சீர் அடியார் எல்லாம்.

Koviloor Digital Library